பக்கங்கள்: 12+II-பதமாங்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 12 திங்கட்கிழமை (29-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:305

## கிளிநொச்சியில் வீதி விபத்து; காரைநகர் இளைஞர் மரணம்!

கிளிநொச்சி,செப்.29

வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பொல்பின், ஓட்டோ வாகனங்களும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் உயிரிழந்தார்; ஓட்டோ சாரதி காயமடைந்தார்.

இவ்விபத்துச் சம்பவம், நேற்று முற்பகல் 11 மணியளவில் ஏ-9 கண்டி வீதியில் - கிளிநொச்சி பிரதான தபாலகத்துக்கு அருகில் - இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த காரைநகரைச் சேர்ந்த சண்முகம் செந்தில்நாதன் (வயது-24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். இவர் கிளிநொச்சி கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தார். ஓட்டோ சாரதியான பரந்தனைச் சேர்ந்த பாலசிங்கம் பிரபாகரன் (வயது-24) என்ற இளைஞா காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

*(விபத்துப் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

(ஜ-9-8)

## விசுவமடுவில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சி,செப்.29

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் நேற்றுமாலை இடம்பெற்ற மற்றொரு வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விசுவமடு, பழைய புளியடிப் பகுதியில் 'ஹண்டர்' ரக வாகனம் ஒன்று மரம் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இவ்விபத்தில் வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை அமரசிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார். (ஜ-9)

## நீண்ட யுத்தத்துக்கான சூழல் உருவாகின்றது!

### எச்சரிக்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,செப்.29

நாட்டில் நீண்டகால யுத்தம் இன்று ஏற்படுவதற்கான சூழல் உருவாகி வருகின்றது.


- ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு முன்னறிவிப்பு விடுத்திருக்கிறார்.

விகாரமாதேவி திறந்த வெளியரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி அதிகாரிகள் சங்கத்தின் 6ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு (12ஆம் பக்கம் பார்க்க)

### அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்

# புலிகள் புலிக்கொடி ஏற்றுவதை கண்காணிப்புக்குழு தடுக்காது!

### நெருக்கடி,பதற்றம் ஏற்பட்டால் தவிர்க்க நடவடிக்கை எடுக்கும் கிளிநொச்சியில் நேற்றைய இருதரப்பு பேச்சுக்களின் பின் அறிவிப்பு





நேற்றைய பேச்சுக்களின் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலிவ்சன் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிப்பதை முதலாவது படத்திலும் பேச்சில் கலந்துகொண்ட கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

கிளிநொச்சி,செப்ரெம்பர்29

**அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சிகளின் போது புலிக்கொடி ஏற்றப்படுவதால் ஏற்படும் பதற்றம், நெருக்கடி ஆகியவற்றைப் போக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நடவடிக்கை மேற்கொள்ளும். அதேவேளை, ஏதேனும் ஒரு சம்பவம் நடைபெற்றால் புலிகளின் உள்ளூர் பொறுப்பாளருடன் கண்காணிப்புக்குழு உடனடியாகத் தொடர்புகொள்ளும்.**

நேற்றுக் கிளிநொச்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலிவ்சன் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினரும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரும் நடத்திய பேச்சுக்களில் இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இச்சந்திப்பு காலை 11 மணிமுதல் பிற்பகல் (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் எரிந்த மற்றுமொரு சடலம் இரு துப்பாக்கிகளுடன் மீட்பு

வவுனியா,செப்.29

வவுனியாவில் மற்றுமொரு சடலம் கடந்த சனிக்கிழமை முற்பகல் பொலஸாரால் மீட்கப்பட்டது. எரியுண்ட நிலையில் மீட்கப்பட். இச்சடலத்தின் அருகே இரண்டு துப்பாக்கிகளும் ஒரு 9 மி.மீ துப்பாக்கியின் தோட்டா ஒன்றும் காணப்பட்டன.

வவுனியா, ஐயங்கன்குளம், காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச்சென்ற ஓர் இளைஞர் அப்பகுதியில் சடலம் ஒன்று இருப்பதாக பொலீஸாருக்கு தகவல் கொடுத்தார்.

குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற பொலீஸார் தலை, இடதுகை, நெஞ்சுப்பகுதி, எலும்புகள் ஆகியவற்றுடன் சடலத்தை மீட்டுள்ளார்.

சடலத்தின் கண்கள் கட்டப்பட்டிருந்தன.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவு (12ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் - புஷ் சந்திப்பு நவம்பரில்!

கொழும்பு,செப்.29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்குமிடையே விசேட சந்திப்பொன்று எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வாஷிங்ரனிலுள்ள வெள்ளை மாளிகையில் நடைபெறுமென நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்புக்கென பிரதமர் ரணில் (12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஏழு இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடலில் கைது

யாழ்ப்பாணம்,செப்.29

காங்கேசன்துறைக் கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன்பிடித்துக்கொண்டிருந்த ஏழு இந்திய மீனவர்களை காங்கேசன்துறைக் கடற்படையினர் நேற்றுக் காலை கைதுசெய்திருக்கின்றனர்.


கைதான ஏழுபேரும் காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிவான் முன் நேற்று மாலை ஆஜர்செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்களில் அங்கப்பன் (12ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோன் | NSB





விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கரின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சங்கரின் உருவப்படத்துக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதை முதல் படத்திலும், சங்கரின் உருவச் சிலைக்கு கேணல் பால்ராஜ் மலரஞ்சலி செலுத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

பொலீஸ் நிலையங்களில் நடக்கும்

# கைதிகள் சித்திரவதையை தடுப்பதற்கு விசேட திட்டம்

கொழும்பு,செப்.29

பொலீஸாரினால் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் பொலீஸ் நிலையங்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாவதைத் தடுக்க பொலீஸ் திணைக்களம் விசேட திட்டமொன்றை வகுத்துள்ளது.

தேசிய பொலீஸ் ஆணைக்குழுவும் பொலீஸ் உயர்தர அதிகாரிகளும் நடத்திய பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கத்தின்படியே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

புதிய திட்டம் குறித்து பொலீஸ்மா அதிபர் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பியிருக்கிறார் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் குறித்து பொலீஸ் திணைக்களத்தின சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டும்; சந்தேக நபரைச் சந்திக்க அவரது நெருங்கிய உறவினர்களை அனுமதிக்கவேண்டும்; பொலீஸ் விசாரணைகளின் போது சந்தேகநபர் சார்பில் அவதானியாக இருக்க சட்டத்தரணி ஒருவர் அனுமதிக்கப்படவேண்டும். காவலில் இருக்கும் சந்தேக நபரைச் சந்திக்க மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும்.

இவை உட்பட பல பணிப்புரைகள் புதிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

பொலீஸ் காவலில் இருக்கும்போது இறந்த கைதிகளின் எண்ணிக்கை சமீப காலத்தில் அதிகரித்திருப்பதையடுத்தே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. (எ)

## பாணந்துறை வாகன விபத்தில் இருவர் பலி!

பாணந்துறையில் நேற்றுக்காலை ஏற்பட்ட வாகன விபத்தொன்றில் இருவர் கொல்லப்பட்டனர்; ஐவர் படுகாயங்களுக்குள்ளாகினர். காய்கறிகள் ஏற்றிய லொறி ஒன்று கொழும்பு நோக்கி வருகையில் பாணந்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு லொறியுடன் மோதியதில் இவ்விபத்து நடைபெற்றதாக பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த ஐவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். நகர வீதிகளில் வாகனம் நிறுத்துவோர் மீது நடவடிக்கை

போக்குவரத்துப் பொலீஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.நகரப் பகுதி வீதிகளில் தேவையற்ற வகையில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சனநெருக்கடி மிகுந்துள்ள நகரத்தின் பல்வேறு வீதிகளிலும் போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்கள் நிறுத்தப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. நகரப் பகுதியில் உள்ள நிறுவனங்களில் கடமை புரியும் பலர் தமது வாகனங்களை போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்திவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்துவோரின் செயல்களால் விபத்துக்கள் அதிகரிக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன.

இதேவேளை, குளிர்பான நிலையங்கள், தேநீர்ச்சாலைகளுக்குச் செல்வோர் அவற்றின் முன்பாக துவிச்சக்கர வண்டிகளை நிறுத்திவிட்டுச் செல்கின்றனர். இதனால் பாதசாரிகள் உட்படப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இத்தகையோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அவர்களை கட்டுப்படுத்தவும் முடியாது.

எனவே, மிகவிரைவில் ஏனையோரின் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் செயற்படுவோர் மீது கடும நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-12)

## அரசியல் கருத்தரங்கு

வலி.வடக்கு,செப்.29

தமிழர் தேசிய விழிப்புணர்வு கழகத்தினால் 'சமகால அரசியல் பற்றிய ஓர் பன்முகப் பார்வை' என்னும் விடயம் பற்றிய அரசியல் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் எஸ். சகாயசீலன் இதில் கருத்துரை வழங்குவார். (எ-86)

## அவசர கலந்துரையாடல்

ஏழாலை,செப்29

யாழ். மாவட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தத்தமது கல்விச் சான்றிதழ்களுடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# குடாநாட்டு சிறுவர் மத்தியில் சினிமா மோகம் அதிகரிப்பு!

சிறுவர் அரங்கு நிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம்,செப்.29

குடாநாட்டு சிறுவர்கள் மத்தியில் சினிமா மோகம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, சிறுவர்களின் சினிமா மோகத்துக்கு அவர்களின் பெற்றோரே ஊக்குவிப்பாளர்களாக இருப்பதும் கவலை தருவதாய் உள்ளது.

நேற்றுக்காலை நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற 'வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு' என்ற கருப்பொருளிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது ஆய்வுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு சிறுவர்களுக்குத் தெரியாத சினிமாப் படங்களே இல்லை. அத்துடன், அவர்களுக்குத் தெரியாத நடிகைகளும் இல்லை எனலாம். இதற்கு பிரதான காரணம் பெற்றோர்கள். ஏனெனில், வீடுகளில் தொலைக்காட்சி கலாசாரத்தைத் தோற்றுவிக்க அவர்களும் உடன்பாடாக இருப்பதுதான் காரணம்.

இந்நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை எமது சமூகம் சந்திக்க நேரிடும்.

இந்தியாவில் இருந்து வருகின்ற சினிமாப் படங்களையும் அங்கிருந்து ஒளிபரப்புச் செய்யப்படும் சினிமா சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் எம்மால் தடை செய்யமுடியாது.



சினிமாப் படங்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் பல படங்கள் பல்கலைக்கழக மாணவர்களுடன் தொடர்பு பட்டவையாகத்தான் உள்ளன. அந்தப் படங்கள் காதலை மையமாக வைத்துத்தான் தயாரிக்கப்படுகின்றன.

யாழ். குடாநாட்டில் 'பாய்ஸ்' சினிமாப் படம் தடை செய்யப்பட்டுள்ளது என கூறப்பட்டது. ஆனால், இன்று அந்தப் படக் கசற்றுக்களை இங்கு பெற முடிகிறது. அது இங்கு எவ்வாறு எடுத்துவரப்பட்டது என்று புரியவில்லை.

எனவே, உலகத்துடன் நாங்கள் சேர்ந்து வாழ வேண்டும். தமிழனுக்கு தனிக்குணம் உண்டு என்று தொடர்ந்து கூறிக்கொண்டு இருக்கமுடியாது. தமிழன் மரியாதையுடன் வாழ்கின்ற நிலைமை உருவாக வேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்களின் மனநிலையை அறிய வேண்டும். அந்த மாணவர்களது வாழ்வுச் சூழலை அறிந்திருத்தல் வேண்டும். ஆனால், ஆசிரியர்கள் இவற்றைப் பார்ப்பதில்லை - என்றார். (எ-ரி)

சுகாதார ஊழியர்கள் 13 ஆவது நாளாக வேலை நிறுத்தம்

# தொழிற்சங்கங்கள் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி, பொதுக் கூட்டம்

கொழும்பு,செப்.29

அரசாங்க வைத்தியசாலைகளில சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தம் இன்று 13 ஆவது நாளாகத் தொடர்கிறது. இந்நிலையில், வேலை நிறுத்தப்போராட்டத்துக்கு நியாயமான தீர்வை வழங்கக்கோரி அரசாங்கத்தை வலியுறுத்த, நூறு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைத்திய சாலைகளில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டாலும் நோயாளர்களுக்கான சகல சேவைகளையும் வழங்கத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தின் முன் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும், பின்னர் அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று லிப்டன் சுற்று வட்டத்தில் பொதுக் கூட்டத்தை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி., பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று தொழிற்சங்கங்களின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் கூறினார்.

இதற்கிடையே, சுகாதார தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அப்பாவி நோயாளர்களின் உயிர்களைக் காக்க முன்வருமாறு அரசாங்க, தனியார் துறையைச் சேர்ந்த சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றன. இலங்கை வங்கி ஊழியர் சங்கம், மத்திய வங்கி ஊழியர் சங்கம், அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனம் என்பனவும் இச்சங்கங்களில் அடங்கும். (எ)

உள்துறை அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்:

# சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆய்வு

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச நாடாளுமன்றங்களின் சங்க மனித உரிமைகள் ஆணைக்குழு ஆய்வு செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

எதிர்க்கட்சி எம்.பிக்களான நிமல் சிறிபால டி சில்வா, மங்களசமரவீர உட்பட 10 எம்.பிக்கள் இக்குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.


அரசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் இடையூறுகள் குறித்து பொலீஸார் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது தொடர்பாகவே இக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

இந்த ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இருந்து வருகிறார். பிரிட்டன், ஸ்கண்டிநேவிய நாடுகள் உட்பட 154 நாடுகளின் அமைச்சர்கள் சர்வதேச நாடாளுமன்றங்களின் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனர். (எ)





கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளை மோதிய வான், சேதமடைந்து கிடக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞனின் சடலம் ஆகியவற்றை படங்களில் காணலாம்.



புகழ்பெற்ற திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. பிரம்மோற்சவத்தை முன்னிட்டு நுழைவாயிலில் உள்ள வெள்ளைக் கோபுரம் முதல் மூலஸ்தானம் மேல் உள்ள தங்கக் கோபுரம் வரை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் தங்கக் கொடிமரத்தில் கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# ஜப்பானில் மீண்டும் பூகம்பம்!

டோக்கியோ,செப்.29

ஜப்பானில் நேற்றுமுன்தினம் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் ஹொகைடோ தீவு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பூகம்பத்தால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 600 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஹொகைடோ தீவில் மீண்டும் 7.8 ரிச்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டது. மூன்று முறை அங்கு ஏற்பட்ட பூகம்பங்களினால் ஏராளமான வீடுகளில் விரிசல் ஏற்பட்டன. பல இடங்களில் கூரையில் பதிக்கப்பட்டிருந்த ஓடுகள் கீழே விழுந்தன. இதன் காரணமாக 40 ஆயிரம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

ஹொகைடோவின் பெரும்பாலான வீதிகள் பிளவுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. கடலில் அலைகளின் கொந்தளிப்பு இன்னமும் குறையவில்லை.

நிகுஷிரோ விமான நிலையத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரம் இடிந்து விழுந்துள்ளதால் விமானப்போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் குழாய்கள் உடைந்து தண்ணீர் வீணாகியுள்ளது.

காயமடைந்தவர்களில் 28 பேருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட பூகம்பங்களால் பலரது வீடுகள் குப்பை கூளமாகக் காட்சியளிக்கின்றன.

# ஏழைகளின் எண்ணிக்கை அமெரிக்காவில் உயர்வு

வாஷிங்டன்,செப்.29

அமெரிக்காவில் வறுமை நிலையில் வாழ்வோரின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 17 லட்சமாக அதிகரித்துள்ளது. 2001இல் வறுமை நிலையில் வாழ்வோரின் எண்ணிக்கை 3 கோடியே 29லட்சமாக இருந்தது. அந்த எண்ணிக்கை புதிய கணக்கெடுப்பில் 3 கோடியே 46 லட்சமாக உயர்ந்துள்ளது.

முந்தைய ஆண்டில் 11.7 சதவீதம் பேர் வறுமை நிலையில் இருப்பதாகத் தெரியவந்தது. இந்த விகிதம் தற்போதைய கணக்கெடுப்பில் 12.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. நடுத்தர வர்க்கத்தினர் வருவாய் 2001இல் 1.1 சதவீதம் குறைந்து 42ஆயிரத்து 409 டொலராகச் சரிந்துவிட்டது. அதாவது, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வறியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவதும், வருவாய் அளவு குறைவதும் தெரியவந்துள்ளது.

எனவே, 2002ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் காரசாரமான விவாதம் நடைபெறக்கூடும் என்றார் தேசிய அர்பன் லீக் அமைப்பின் தலைவர் மார்க் மோரியல். வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு 26 வாரங்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

4 பேரைக்கொண்ட குடும்பத்தில் ஆண்டுக்கு 18ஆயிரத்து 392 டொலர் (ரூ.18 லட்சம்), 3 பேர் கொண்ட குடும்பத்தில் 14ஆயிரத்து 348 டொலர் (ரூ.14 லட்சம்), 2 பேர் கொண்ட குடும்பத்தில் 11 ஆயிரத்து 756 டொலர் (ரூ.11 லட்சம் ரூபா), தனிநபராக இருந்தால் 9 ஆயிரத்து 183 டொலர் (ரூ.9 லட்சம்) என்ற அளவுக்கு கீழ் வருமானம் இருந்தால் அவர்கள் வறுமை நிலையில் உள்ளவர்கள் என 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உத்தரவு தெரிவிக்கிறது.

# பாக். எல்லையில் பின்லேடன்; பர்வேஷ் முஷாரப் ஒப்புதல்!

இஸ்லாமாபாத்,செப்.29

சர்வதேச இஸ்லாமிய தீவிரவாதி ஒஸாமா பின்லேடன், பாகிஸ்தானுக்கும ஆப்கானிஸ்தானுக்கும் இடையே சுதந்திரமாக உலவி வருகிறார் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஒப்புக்கொண்டுள்ளார்.

"த குளோப் அன்ட் த மெயில்" என்ற கனடா நாட்டுப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்ததால், அமெரிக்காவுக்கு எதிரான மனநிலை பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நிலவுகிறது. இதனால், பின்லேடனைப் பற்றி தகவல் கொடுத்தால் இரண்டரைக் கோடி டொலர் பரிசு தரப்படும் என்று அறிவித்த போதிலும் அவரைப் பற்றி யாரும் தகவல் சொல்வதில்லை. பின்லேடன் உயிரோடுதான் இருக்கிறார். அவர் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே சுதந்திரமாகச் சென்றுவருகிறார் என்று அவரைப் பார்த்தவர்கள் கூறுகின்றனர். அவர் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டிருப்பதாக உளவுத் துறையினர் முன்னர் தெரிவித்த தகவல்கள் இப்போது எனக்குச் சந்தேகத்தைத் தருகின்றன.

பாகிஸ்தானில் ராவல்பிண்டி உட்பட பல்வேறு நகரங்களுக்கு ஒஸாமா வந்து சென்றிருக்கலாம். அதை நான் மறுக்கமாட்டேன். தென் அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர் சேகுவேராவை, அமெரிக்க ஆதரவு பெற்ற பொலிவியா நாட்டு இராணுவத்தினர் காடுகளில் தேடி அலைந்தனர். 1967இல் அவரைச சுட்டுக்கொன்றனர். அதைப் போலத்தான் இப்போது ஒஸாமாவைத் தேடி வருகிறோம். அமெரிக்க உளவுத் துறை அளித்த தகவலின் உதவியோடு ஒஸாமாவை நாங்கள் நெருங்கி விட்டோம் என்று நம்புகிறேன். மலைப் பகுதியில் அவர் பதுங்கியிருப்பதாகத் தெரிகிறது. அல்கெய்டா தீவிரவாத அமைப்புடன் சேர்ந்து ஆப்கானிஸ்தானை ஆட்சிசெய்த தலிபான் வீரர்களை இராணுவ அதிகாரி என்ற வகையில் மதிக்கிறேன். பாகிஸ்தானின் எல்லை மாகாணத்தில் தலிபான்கள் மீண்டும் வலுவடைவதாகத் தெரிகிறது. ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டுப் படைகளை அதிகரிக்காவிட்டால், தலிபான்களும் உள்ளூர் தலைவர்களும் சேர்ந்து காபூலில் உள்ள அரசைத் தூக்கி எறிந்துவிடுவர்.

-என்று முஷாரப் கூறியுள்ளார்.(ஔ)

உலக அரங்கில்

# அமெரிக்க, ரஷ்ய ஜனாதிபதிகள் இணைந்து ஈரானுக்கும், வடகொரியாவுக்கும் மிரட்டல்!



மேரிலாண்ட்,செப்.29

ஈரானையும், வடகொரியாவையும் ஜனாதிபதி புஷ்ஷும், ஜனாதிபதி புடினும் கூட்டாகச் சேர்ந்து மிரட்டியுள்ளனர். இரு நாடுகளும் அணுவாயுதத் திட்டங்களை உடனடியாகக் கைவிடவேண்டும். அல்லது கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

மேரிலாண்டில் உள்ள ஓய்வு விடுதியில் இரு தலைவர்களும் நேற்றுமுன்தினம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சந்தித்தனர்.

சுமார் மூன்று மணிநேரம் நடந்த இச்சந்திப்பின் பின் இரு தலைவர்களும் கூட்டாக இணைந்து ஈரானையும், வடகொரியாவையும் மிரட்டினர். அத்துடன், ஈராக் விடயம் குறித்தும் ஜனாதிபதி புஷ் இச்சந்திப்பில் பேசத் தவறவில்லை. ஆனால், ஈராக்கிற்கு உதவி வழங்குவதற்கு ஜனாதிபதி புடின் இணங்க மறுத்திருக்கின்றார்.

ஈராக் விடயத்தில் ஐ.நா.தீர்மானம் ஒன்று இல்லாமல் ரஷ்யா தலையிடமாட்டாது என்று தெட்டத்தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார் அவர்.

ஜனாதிபதி புடினும், ஜனாதிபதி புஷ்ஷும் தமக்கிடையேயான சந்திப்பை முடித்துக் கொண்டு நிருபர்களுக்குப் பேட்டியளித்தனர்.

பேட்டியில் ஜனாதிபதி புடின் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டங்களைக் கைவிட வேண்டும். அதற்குப்பரிகாரமாக அந்த நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும்.

ஈரானின் தென்பகுதியில் அமையவிருக்கும் 800 மில்லியன் டொலர் மின்னுற்பத்தி நிலைய நிர்மாணத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க அமெரிக்கா முயற்சித்திருக்கிறது. இதற்கு ரஷ்யா அனுமதிக்காது.

இந்த விடயங்கள் குறித்து ஈரானுக்குத் தெளிவான தகவல்களை அனுப்பிவைப்போம். பேரழிவு ஆயுதங்கள் எங்கு உற்பத்தி செய்யப்படினும் அதனை ரஷ்யா ஆதரிக்காது - என்றார்.

வடகொரியா விவகாரத்தில் இரு தலைவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோதும் அவை பின்னர் சமரசம் செய்யப்பட்டன.

அணுவாயுதத்திட்டத்தை வடகொரியா கைவிடுவதற்கு பிரதியீடாக அந்நாட்டிற்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி புடின் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி புஷ் நிராகரித்திருக்கிறார்.

மேற்படி பேச்சுக்கள் மகிழ்ச்சி தருவதாக ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். ரஷ்யாவும், அமெரிக்காவும் பயங்கரவாதத்தின் இலக்குகளாயுள்ளன என்று தெரிவித்த புஷ், செச்சினியா மீது ரஷ்யா எடுக்கும் கடும் நடவடிக்கைக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர், வர்த்தகர், கல்விமான்கள், கலைஞர்கள் அமெரிக்கா செல்வதற்கான விஸாமுறைகள் பற்றி சந்திப்பின்போது புடின் குறை கூறினார். இதற்குப் பதிலளித்த புஷ்



"இங்கு வருபவர்கள் பயங்கரவாதிகளாகவன்றி நல்ல மனிதர்களாக இருக்கவேண்டும் என்பதே எமது நோக்கம்" என்று தெரிவித்தார்.

# பலஸ்தீன அமைச்சரவைக்கு 'பதாஹ்' கட்சி அங்கீகாரம்

ஜெரூசலேம்,செப்.29

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் 'பதாஹ்' இயக்கம் புதிய பலஸ்தீன அமைச்சரவையை அங்கீகரித்தது.

அஹமட் குரேயை பிரதமராகக் கொண்ட புதிய பலஸ்தீன அமைச்சரவையில் யஸீர் அரபாத்தின் ஆதரவாளர்களே அதிகம் இடம்பெற்றுள்ளனர்.

பலஸ்தீனப் பிரதமராக இருந்த மஹ்முட் அபாஸ், பலஸ்தீனத் தலைவர் அரபாத்துடன் ஏற்பட்ட அதிகாரப் போட்டி காரணமாக இம்மாத ஆரம்பத்தில் பதவி விலகினார். இதனால் புதிய பலஸ்தீன அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதன்படி, அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் அரபாத்தின் நெருங்கிய சகாவான நஸீர் யூசுவ், உள்துறை அமைச்சராகப் பிரேரிக்கப்பட்டுள்ளார். இதனால், பலஸ்தீனத் தீவிரவாதிகள் தொடர்பாக பலஸ்தீன நிர்வாகத்தின் போக்கு கடுமையாக இருக்காதெனக் கருதப்படுகிறது. பலஸ்தீன அமைச்சர்களின் பட்டியல் இறுதியாக்கப்படவில்லை என்றும் - அரபாத்துக்கு நெருக்கமான பலர் அமைச்சரவையில் சேர்க்கப்படலாம் என்றும் -

பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

# இத்தாலியில் திடீர் மின் தடை; நகரங்கள் இருளில் மூழ்கின!

ரோம்,செப்.29

இத்தாலியில் நேற்று ஏற்பட்ட திடீர் மின் தடையால் அங்கு பணிகள் அனைத்தும் ஸ்தம்பித்தன.

கிறீன்விச் நேரப்படி பிற்பகல் இரண்டு மணியளவில் மின்சாரத் தடை ஏற்பட்டது. இதனால், இத்தாலியின் ரூரின் பகுதியில் இருந்து தென் பகுதித் தீவான சிசிலி வரையான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட மின்சார ரயில்கள் பாதிவழியில் நின்றுள்ளன. நிலத்தடி ரயில்கள், சேவின் ரயில்களில் பயணிகள் அகப்பட்டுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் துரித கதியில் நடைபெறுகின்றன. தொலைபேசி இணைப்புகள் சில இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில் தொலைபேசியை அவசியமின்றி பயன்படுத்தவேண்டாமென தொலைத்தொடர்பு நிலையம் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பிற நாடுகளில் இருந்து வரும் மின் இணைப்பு கம்பிகளில் ஏற்பட்ட கோளாறே மின் தடைக்குக் காரணம் என்று அறியப்பட்டுள்ளது. மின் தடையை சீராக்க மின்சார சபை துரிதகதியில் செயற்பட்டு வருவதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள மின் துண்டிப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடு முழுவதையும் பாதித்துள்ளது.

மின் துண்டிப்பையடுத்து எதிர் வரும் இரண்டு நாள்களுக்கு ரோமில் நடைபெறவிருந்த இரவு நேர களியாட்ட, கலாசார நிகழ்வுகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மின்தடையையடுத்து மக்கள் வீடுகளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்றனர். (ஔ)



இத்தாலியில் மின் தடையால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. அதனால், இருளின் மத்தியில் வீதியில் நிற்கும் பொதுமக்கள்.

# அல்ஜீரியாவில் 150பேர் கொலை!

இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அல்ஜீரிய இராணுவத்தினரும், துணைப்படையினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். இந்நடவடிக்கையின் போது கடந்த வாரம் மட்டும் 150 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனை இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. இஸ்லாமிய இரட்சிப்பு முன்னணி என்ற கிளர்ச்சி அமைப்பின் உறுப்பினர்களையே தாம் சுட்டுக் கொன்றதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஔ)

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

# பதவி வெற்றிடம்

கீழ்க் குறிக்கப்படும் பதவிக்கு 18-45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

லொறிச்சாரதி - இல. 312/13
சம்பள அளவுத்திட்டம் 4000 - 5550 / 70X10 - 90X10 (இத்துடன் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும்போது அதற்கான படிகளும் வழங்கப்படும்)

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

1. 5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும், பாரவண்டி/லொறிச்சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

- ✦ கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது சங்கத்தினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- ✦ சங்கத்தால் கோரப்படும் பிணை செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.
- ✦ விண்ணப்பங்கள் "பொதுமுகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம், திருநெல்வேலி" என்ற முகவரியிட்டு, 15.10.2003 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- ✦ பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும், தகுதியற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

- பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
திருநெல்வேலி.

(C/30399) (26-24-13-18)

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 01 - 1963



ஆண்டவன் அடியில் 13 - 10 - 1999

## அமரர் கந்தையா சிவகுமார் *(சிவா)*

ஆண்டுகள் நான்கு ஓடியே மறைந்ததையா
ஆறுமோ உன் நினைவு எம்மை விட்டு
நாம் இருக்கும் வரை என்றென்றும்
உன் நினைவு எம்மோடு.

*268/5 நாவலர் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (23062) (24-13-18)

*ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:*
குடும்பத்தினர்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 05 - 11 - 1932



மறைவு 30 - 08 - 2003

# அமரர் பொன்னையா நடராசா

*(ஓய்வுபெற்ற ஊழியர், நில அளவைத் திணைக்களம்)*

**எமது இல்ல விளக்காக ஒளி வீசிப் பிரகாசித்த அன்புத் தந்தையே!**
**நீங்கள் மறைந்தாலும் உங்கள் பூமுகம் என்றும் நினைவிலிருக்கும்**
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடனே வந்து எமக்கு உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகள் சிறப்புற நடக்க உதவியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய அன்புள்ளங்கொண்ட அனைவருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

☞ இவரது இறுதிக்காலம் வரை எந்நேரமும் காலநேரம் பார்க்காமல் தேவைப்படும்போதெல்லாம் சிறிதும் தயக்கமின்றி கோபப்படாது இல்லம்நாடித் தேடிவந்து ஐந்து வருடங்களுக்கும் மேலாக ஆதரவு காட்டி அன்னாருக்கு சிகிச்சையளித்து உதவி நல்கிய அல்வாய் வடக்கு, குமிழடியைச் சேர்ந்த டாக்டர் வேலும்மயிலும் அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி கூறக் கடப்பாடுடையோம்.

இன்று (29.09.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


*"வள்ளி வளவு"*
*வியாபாரிமூலை,*
*பருத்தித்துறை.* (23034) (24-13-18)

பிரிவால் வருந்தும் :
**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

# நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்
# நன்றி நவிலலும்

*தாயின் மடியில்*
27 * 09 * 1949



*அமரர்*
## நடராசா தர்மகுலசிங்கம்
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

*ஆண்டவனடியில்:*
02.09.2003

காற்றாகிப் பறந்து சென்றதப்பா ஒரு திங்கள்
செவிகளில் இன்றும் ஒலிக்கிறதே இனிய உங்கள் குரல்
அப்பா என அன்போடு அழைத்திடும் எம்மிதயம் ஆறவில்லை
ஆலமரமாய் நீங்களிருக்க அதன் விழுதாய் நாமிருந்தோம்
ஆலமரமும் சாய்ந்தது – ஆனந்தமும் பறிபோனது.
அப்பா என நாம் அழைத்த நா இப்போது அடங்கிவிட்டதய்யா
எம்முடன் அணையாத தீபமாக ஒளிவிடும் வெண்ணிலவே அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்களின் குடும்ப விளக்காகத் திகழ்ந்து 02.09.2003இல் சிவபதமடைந்த அன்பு அப்பாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் வைத்தியசாலை நாடிவந்து ஆறுதல் கூறியோருக்கும் இரங்கல் செய்திகள் அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும், இறுதிவரை மயானம் வரை வந்து உதவியோர்க்கும், எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு எதிர்வரும் (02.10.2003) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*புலோப்பளை மேற்கு,*
*பளை.*

மனைவி (யோகம்)
*பிள்ளைகள்* - சுதா, சுஜா, சுபா, சேந்தன்,
*மருமக்கள்* - உதி, லிங்கம்,
*பேரன்* - லக்ஷன்.

(23053) UTHAYAN

உதயன்

## ஐ.நா. பொதுச் செயலரின் இலங்கை விஜயம்

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் தனது துணைவியார் சகிதம் அடுத்த மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயம், பெரும் அரசியல் எதிர்பார்ப்புக்களையும் சர்ச்சைகளையும் தோற்றுவிக்கும் விடயமாக மாறிவருகின்றது.

கடைசியாக இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. பொதுச் செயலாளர் ஊதாண்ட். அந்த விஜயம் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது.

இலங்கையில் அமைதி முயற்சிகள் - சமாதான நடவடிக்கைகள் - முனைப்பாக முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் இந்தச் சமயத்தில் இப்போது மீளவும் ஐ.நாவின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இருபது ஆண்டுகாலக் கொடூரப் போரினால் சீரழிந்து கிடக்கும் இந்த யுத்த பூமிக்கு - போர்நிறுத்தமும் சமாதான முயற்சிகளும் முன்னெடுக்கப்படும் இந்தப் பிரதேசத்துக்கு - ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் விஜயம் செய்வது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த - சர்வதேச அரசியல் விடயங்கள் பின்னிப்பிணைந்த - அம்சமாகக் கருதப்படுகின்றது.

அடுத்த மாத முற்பகுதியில் இந்தியா, மலேஷியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பிக்கும் கோபி அனான் தம்பதியர் ஒக்ரோபர் 9ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கு வரும் ஐ.நா. பொதுச் செயலாளர் சமாதான முயற்சிகளில் - அமைதி நடவடிக்கைகளில் - தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் இங்கு சந்தித்துப் பேசவேண்டும் என்ற அரசியல் அழுத்தம் புலிகள் சார்புப் போக்குடையவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

'யுனிசெவ்', ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் போன்ற ஐ.நா. முகவர் அமைப்புகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றன. அவற்றின் பணிகளுக்கு மதிப்பளிக்கும் விதத்திலேனும் ஐ.நா. பொதுச்செயலாளர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களுடன் உரையாடுவது அவசியம் என்று இராஜதந்திர அழுத்தம் ஐ.நாவை அண்டி இயங்கும் புலிகள் ஆதரவு சக்திகளால் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

இதேவேளை, இலங்கைக்கு வரும் ஐ.நா. பொதுச் செயலாளரை வன்னிக்கு வந்து அங்கு தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை நேரடியாகப் பார்ப்பதோடு புலிகளின் தலைவர்களையும் சந்தித்து உரையாடுமாறு கோரும் அழைப்பு தமிழ் மக்களின் சார்பிலும் புலிகளின் சார்பிலும் ஐ.நா.பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணையாளராக இருக்கும் நோர்வேத் தரப்பும் இதில் கரிசனை காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஐ.நா.பொதுச் செயலாளர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்தித்து உரையாடும் நிலைமை உருவானால் அது உள்நாட்டில் பெரும் அரசியல் சர்ச்சையாகி, அரசுக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துவிடும்; புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒரு தனிநாடு என்பதை ஐ.நா. செயலாளரே அங்கீகரித்துவிட்டார் என்ற பிரசாரம் முனைப்பாக முன்னெடுக்க அது வழி செய்யும் என்றெல்லாம் அரசுத் தரப்பு அஞ்சுகின்றது.

எனவே, இலங்கை வரும் ஐ.நா. பொதுச் செயலாளர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்லாமல் இருப்பதை உறுதி செய்வதில் அரசுத் தரப்பு விழிப்பாக இருக்கின்றது.

இந்த சர்ச்சைகள், குழப்பங்களுக்கு மத்தியில் தான், தனது உத்தேச இலங்கை விஜயத்தை மட்டும் ஒத்திவைத்தால் என்ன என்ற முடிவுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் வந்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்தியாவுக்கும் மலேஷியாவுக்கும் திட்டமிட்டபடி விஜயம் செய்யும் கோபி அனான், ஈராக் விடயங்கள் பற்றிய விவகாரங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் தனது மூன்று நாள் இலங்கை விஜயத்தை மட்டும் பின் ஒரு நாளுக்குத் தள்ளிப் போடுகின்றார் என்று இலங்கை அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தற்போது அமெரிக்கா சென்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தாமே நேரில் ஐ.நா. பொதுச் செயலாளரைச் சந்தித்து இலங்கை விஜயத்தை ஒத்திவைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார். அத்தோடு, புலிகளின் பிரதிநிதிகளை வன்னிக்குச் சென்று சந்திக்காமல் கட்டுநாயக்க விமான நிலையத்திலோ, கொழும்பிலோ அல்லது ஓமந்தையிலோ அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - சந்திக்கும்படியும் பிரதமர் வேண்டியிருக்கின்றார்.

பிரதமரின் சந்திப்பை அடுத்து இலங்கை விஜயத்தை ஒத்திப்போடும் தமது முடிவை மறுபரிசீலனை செய்ய கோபி அனான் இணங்கியிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

தனது இலங்கை விஜயத்தின் போது அவர் புலிகளின் பிரதேசத்துக்குச் செல்வாரா? புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பாரா? - இவையெல்லாம் இனித்தான் தெரியவரும்.

# தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தை சொந்த இடத்தில் இயக்க முடியவில்லை!

## அதன் தலைவர் கவலை தெரிவிப்பு

தெல்லிப்பழை,செப்.29

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகக் கட்டடம் படையினரால் சங்க நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டும் அதனை மீண்டும் புனரமைத்து இயக்க முடியாத நிலையிலிருப்பதாக தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.சிவமகாராசா கூறினார்.

உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் இருக்கும் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான அதன் தலைமையகக் கட்டடம் அச்சங்கத்திடம் சுமார் 3 மாதங்களிற்கு முன்பு படையினரால் மீள ஒப்படைக்கப்பட்டது. ஆனால், ஒப்படைக்கப்பட்ட கட்டடத்தில் தலைமையகத்தை இயக்க முடியாதிருப்பதாக தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

எமது பழைய தலைமையகக் கட்டடம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ளது. அங்கு நாம் தலைமையகத்தைக் கொண்டுசென்றால் பணியாளர்கள் அங்கு சென்று கடமையிலீடுபட்டுவிட்டுத் திரும்புவதற்கு படையினர் எத்தகைய நடைமுறைகளை செயற்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இயங்கும் சுகாதாரப் பணிமனை மற்றும் பாடசாலைகளுக்குச் சென்றுவருவோர் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக சுகாதார பணிமனையில் இரு ஊழியர்களை அங்கு வந்து கடமையிலீடுபட படையினர் தடை விதித்துள்ளனர்.

இதேவேளை, உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் செயற்படும் யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, புற்றுநோய் வைத்திய சாலை, சுகாதார சேவைகள் பணிமனை போன்றவற்றின் காவலாளிகள் கூட இரவில் அங்கு தங்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாடசாலைகளின் மாணவர்கள் விடுமுறை நாள்களில் தமது பாடசாலைகளுக்குச் சென்று விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபட முடியாதுள்ளது. அப்பாடசாலைகளில் விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் கூட நடத்துவதில் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தநிலையில், கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தைச் சொந்தக் கட்டடத்துக்குக் கொண்டு சென்றால் பல பணியாளர்கள் பணிக்கு வரமுடியாத நிலை ஏற்படக்கூடும். தலைமையகத்தை அங்கு அமைத்தால் எமது களஞ்சியங்களும் அங்குதான் அமைய வேண்டும். ஆனால், அவற்றுக்கு காவலாளிகளை இரவு வேளைகளில் கடமையிலீடுபடுத்த முடியாது. ஏற்கனவே மாவிட்டபுரம் ஆலயத் திருவிழா காலத்தில் நாம் அங்கு அமைத்திருந்த தற்காலிக விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. இது குறித்து நாம் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளோம்.

இந்த நிலையில் பெருங்களஞ்சியங்களை அப்பகுதியில் எப்படி நிறுவமுடியும்? களஞ்சியங்களுக்குப் பொருள்களை ஏற்றி வரும் லொறிகள் இரவிலும் வரலாம். அப்போது அவற்றை படையினர் உள் அனுமதிப்பார்களா? இத்தகைய சிக்கல்கள் காரணமாகவே எம்மால் சொந்தக் கட்டடத்தில் எமது சங்கத்தை இயக்கமுடியாதுள்ளது. இன்று நாம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் சுமார் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை வாடகையாக மாதந்தோறும் செலுத்தி வருகிறோம் - என்றார் அவர். (ஒ-150)

# பாம்பினால் கடியுண்ட தொழிலாளி முகமாலையில் காத்திருக்க நேர்ந்தது

## ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டபோது

தென்மராட்சி,செப்.29

இயக்கச்சியில் பாம்பினால் கடியுண்ட தொழிலாளி ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட சமயம் முகமாலையில் சுமார் அரை மணிநேரம் காத்திருக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இயக்கச்சி, கரந்தாய்குளப் பகுதியில் படையினரால் அமைக்கப்பட்ட மண் அணையை அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது. இந்தப்பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் மண்ணினால் மூடப்பட்டிருந்த பனங்குற்றியை அகற்ற முற்பட்டார். அப்போது அந்தப் பனைமரக்குற்றிக்குள்ளிருந்த புடையன் பாம்பினால் அவர் கடியுண்டார்.

பளை, பேராலையைச் சேர்ந்த இராசையா இராஜேஸ்வரன் (வயது39) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். பாம்புக்கடிக்கு இலக்கான இவரை ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மோட்டார் சைக்கிளில் கூட்டி வந்தனர். அப்போது முகமாலைச் சோதனைச் சாவடியில் அரைமணி நேரம் காத்திருக்க நேரிட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

உலக வங்கியின் உலர்உணவுத் திட்டத்தின் கீழ் பளைப் பிரதேச செயலகத்தினால் இப்பகுதியில் உள்ள மண் அணைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(ஒ-117)

# மின் வழங்கலைத் துண்டிப்போரை கண்டுபிடிப்பதற்கு உதவி புரியுங்கள்!

## பிரதிப் பொது முகாமையாளர் வேண்டுகோள்

மின் வழங்கலைத் துண்டிக்கும் வகையில் செயற்படுவோரை இனம்காணவும் -

அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் பொது மக்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் மின்சார சபையினர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் விஷமிகளின் அட்டூழியங்களே காரணமாக அமைந்துள்ளன.

குறிப்பாக வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகளை உடைத்தல், மின்கம்பிகள் மீது இரும்புச் சங்கிலிகளைப் போட்டு மின் விநியோகத்தைத் துண்டித்தல் மற்றும் மின் கம்பிகளை அறுத்தல், மின் கம்பங்கள் மேல் நூல்கட்டிய கற்கள், தடிகளை எறிதல் போன்ற செயற்பாடுகள் குடாநாட்டின் பல இடங்களிலும் அதிகரித்துள்ளன.

இதனால், பொதுமக்கள் பாதிக்கப்படுவதுடன், மின்சார சபை ஊழியர்களும் பெரும் சிரமத்தை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக வீண் செலவீனமும் ஏற்படுகின்றது.

இதேவேளை -

சட்டவிரோத மின்பாவனையாளர்களின் தொல்லையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

வீதிகளில் உள்ள மின்விளக்குகள் உடைக்கப்படுவதால் வீதிகளில் இருள் சூழ்ந்துவிடுகின்றது. பொதுமக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது.

எனவே, இத்தகைய நாசகாரச் செயல்களில் ஈடுபடுவோரை இனம்காண பொதுமக்கள் முன்வரவேண்டும்.

குறிப்பாக சனசமூக நிலையங்கள், சமூக ஆர்வலர்கள் முதலானோர் இத்தகைய செயல்களைத் தடுப்பதில் முன்னின்று உழைக்கவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.(எ-12)

# நிமலர் கொலையைக் கண்டித்து செயலகத்தில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,செப்.29

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

இதுவிடயமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக விசாரணைக்குழு ஒன்றை நிறுவி நீதிவழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அடுத்த மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் யாழ்.செயலகத்தில் இயங்கும் தகவல் திணைக்களத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறும் என்று யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

உண்ணாவிரதப் போராட்டம் குறித்து மேற்படி சங்கம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கழிந்தும் இதுவரை வழக்கு விசாரணைகள் நிறைவுபெற்றதாகவில்லை.

அத்துடன் தமிழ்ப்பத்திரிகையாளர்கள் மீது தொடரும வன்முறைகளும் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. இந்த நிலை தொடர்வதாகவே உள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு உடன் நீதி வழங்கப்படவேண்டும். நிமலராஜன் படுகொலை தொடர்பாக விசாரணைக்குழு ஒன்றை நிறுவவும் -

அதன் மூலம் நீதியை நிலைநாட்டவும் பிரதமர் ரணில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்படவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய எழுச்சிப்பேரவையினர், சர்வதேச மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ் மண் பற்றாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டு பூரண ஆதரவு வழங்கவேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

**நாளை**

புரட்டாதி 13
செவ்வாய்க்கிழமை
(30.09.2003)
திதி : பஞ்சமி
முன்னிரவு 10.35 வரை
நட்சத்திரம்: விசாகம்
காலை 6.41 வரை
அனுஷம்
பின்னிரவு 5.04 வரை
மரணயோகம்
சுபநேரம்: 10.30-12.02
ராகுகாலம்: 3.02-4.32
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

குணத்தில் மிக உயர்ந்தவனும் அடிமட்டத்திலிருப்பவனும் மாறவேமாட்டார்கள்.

**கைதடிப் பிரதேசத்தில்**

# மரங்களை வெட்ட மறுப்பதால் மின் விநியோகத்தில் தாமதம்!

கைதடி,செப்.29

மின் விநியோகத்திற்குத் தடையாக உள்ள மரங்களை வெட்டுவதற்கு அவற்றின் உரிமையாளர்கள் மறுப்பதால் கைதடியின் சில பகுதிகளுக்கு மின் வழங்கமுடியாதுள்ளது. இவ்வாறு மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதடி கிழக்கு, கைதடி தென்கிழக்கு, கைதடி மத்தி ஆகிய பகுதிகளுக்கான மின்சார விநியோகத்திலேயே இப்பிரச்சினை எதிர்கொள்ளப்படுகிறது.

கைதடிச் சந்தியில் இருந்து கைதடியின் பிற பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகிக்க ஆயத்தப் பணிகளை மின்சாரசபை மேற்கொண்டு வந்தது.

அப்போது சில வீடுகளில் உள்ள பனை மற்றும் தென்னை மரங்கள், மின்சாரக் கேபிள்கள் மீது சரிந்துவிழும் ஆபத்து இருப்பதை மின்சார சபை ஊழியர்கள் அவதானித்தனர்.

இது சம்பந்தமாக மரங்களின் உரிமையாளர்களை தொடர்பு கொண்டபோதும் அவர்கள் மரங்களை வெட்டமுடியாதென தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால், இம்மாத நடுப்பகுதியில் கிடைக்கும் என எதிர்பாத்த மின்சாரம் குறிப்பிட்ட பகுதிகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-75)




சக்தி, கவர்ச்சிகரமான வடிவமைப்பு, நம்பகத்தன்மையைப் பற்றி நாம் அனைவரும் நினைப்பதுண்டு... நவீன தொழில்நுட்பத்துடன் அதிக சக்தியுடைய 143.43 CC என்ஜின் கொண்ட பள்சர் உங்கள் மனதை நன்கறிந்த எங்கள் காலத்திற்குரிய மோட்டார் சைக்கிள்.

ரூபா. 104,195/-
மேற்படி விலை VAT நீங்கலானது.
ஜக்கெட் இலவசம்!

அது மட்டுமல்ல... உங்கள் நம்பிக்கையை என்றும் பாதுகாக்கும் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் மற்றும் நாடு முழுவதும் பரந்து காணப்படும் சேவை, உதிரிப்பாக முகவர்கள் வலைப்பின்னலூடாக உங்கள் சேவைக்கு தயார் நிலையில். இப்போது நீங்களும் அனைத்தையும் முந்திக்கொண்டு முன்னணியில்...

தன்னிகரற்ற உத்தரவாதம்

- 143.43 CC 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- டிஸ்க் பிரேக் (உலகப் புகழ்பெற்ற இத்தாலி நாட்டு பிரம்போ கம்பனியின் வடிவமைப்புடன்)
- 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு
- கிக் மற்றும் இலக்ட்றிக் ஸ்டாட்டர்
- 18 லீட்டர் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி (3 லீட்டர் ரிசவ்)
- வேகமானி, ட்ரிப் மீட்டர், எரிபொருள் சுட்டி மற்றும் கவர்ச்சிகரமான டெல்டேல் விளக்குகளுடன் (Telltale light)
- சைட் ஸ்டேண்ட் சுட்டிக் காட்டி
- பக்க உறைகள் (Side covers) இரண்டிற்குமான பூட்டு

mel ads 3/6/2454

DPMC
## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி ட்ரேடர்ஸ், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777 – 979279

# மாணவர்களை மதிப்பீடு செய்வது ஆசிரியர்களின் முக்கிய கடமை

ஆசிரியரின் கடமைகளுள் மாணவர்களை மதிப்பீடு செய்வதும் முக்கியமானதொன்றாகும். ஆசிரியர் தமது மாணாக்கருக்குத் தனியே கற்பித்தலை மட்டும் மேற்கொண்டால் போதாது. கற்பித்தலின் நோக்கம், அதாவது விசேட குறிக்கோள்கள் அல்லது சிறப்பு நோக்கங்கள் எவ்வளவு தூரம் நிறைவேறியுள்ளன என்பதை அவர் மதிப்பீடு செய்தல் அவசியமாகும். அம் மதிப்பீட்டின் முடிவுகளின் அடிப்படையில், கற்றல் செயற்பாட்டில் குறைவுபடும் மாணாக்கருக்கு வேண்டிய மேலதிகக் கற்பித்தலை ஆசிரியர் வழங்க வேண்டியவராக இருக்கிறார். அப்பொழுதான் அவர் உண்மையிலேயே ஆசிரியராக ஆக முடியும். ஏனெனில், ஆசிரியர் என்ற வார்த்தையின் பொருள் குற்றம் களைபவர் என்பதாகும்.

மாணவர்களை மதிப்பீடு செய்யும் ஆசிரியர் அம்மதிப்பீட்டின் முடிவு

## கல்விக்களம்

களை அதாவது பெறுபேறுகளை அம்மாணவர்களுக்கு உடனுக்குடன் அறியத்தரும்போதுதான் அவர்கள் தமமைத் திருத்திச் செயற்படக்கூடும். அத்துடன், மாணாக்கர் தொடர்ந்து கற்கவும் ஊக்குவிக்கப்படுவார்கள். இது, கல்வி உளவியல் உலகம் கண்ட உண்மையாகும்.

ஆனால், 40 நிமிட நேரத்தினுள் ஒரு வகுப்பிலுள்ள மாணாக்கர் அத்தனைபேரையும் தனித்தனியே மதிப்பீடு செய்து, மீள வலியுறுத்தி, பின்னூட்டல் செய்வது என்பது ஆசிரியருக்கு மிகவும் கடினமான பணி என்பதையும் யாவரும் அறிவர்.

ஆசிரியரின் மதிப்பீட்டு முறை, வாய்மொழிப் பரீட்சை ஊடாக(Oral Examinations) அமையும்போது நன்று, சரி என்று கூறியோ; பாராட்டியோ பரவலாகத் தமது மாணாக்கரை உற்சாகப்படுத்துவது ஆசிரியருக்கு ஓரளவு எளிது. ஆனால், ஆசிரியரின் மதிப்பீட்டு முறையானது எழுத்துப் பரீட்சையாக அமையும்போது எல்லா மாணாக்கரின் பயிற்சிக் கொப்பிகளையும் விடைத்தாள்களையும் உடனடியாகத் திருத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமுடையது அன்று. ஆனால், அதற்காக ஆசிரியர், மாணாக்கரின் விடைத் தாள்களைத் திருத்தி, பெறுபேறுகளை உடனுக்குடன் அறிவிக்கவும் மீள வலியுறுத்தவும், பின்னூட்டல் செய்யவும் வேண்டிய தமது உன்னத கடமையைப் புறக்கணிப்பதும் உவப்பானதன்று. எனவே, ஆசிரியர் இப்பிரச்சினைக்குச் சாதகமான மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டியவராகின்றார்.

அவ்வகையில், ஆசிரியர் தமது மதிப்பீட்டு முறைகளையும் அதன் அளவையும் தமது ஒரு பாட வேளைக்குரிய விசேட குறிக்கோள்களுக்கு அமைவாகவும் மாணாக்கரின் எண்ணிக்கை, அவர்தம் அறிவுத் தரம் என்பனவற்றுக்கு இசையவும் முன் திட்டமிட்டு வரையறுத்துக் கொள்ளுதல்வேண்டும். வாய்மொழி முறையிலான மதிப்பீடு இலகுவானது என்பதுடன், ஆர்வத்தைத் தூண்டக்கூடியதுமாகும் ஆனால் அதற்காக எழுத்து மூலமான மதிப்பீட்டு முறையை ஆசிரியர் முற்றாகப் புறக்கணித்துவிடவும் முடியாது. ஏனெனில், இறுதிப் பரீட்சைகளிலும் பல்வேறு போட்டிப் பரீட்சைகளிலும் பரீட்சார்த்திகளின் அறிவும் விவேகமும் எழுத்துப் பரீட்சை முறை மூலமே பரிசீலிக்கப்படுகின்றன. அத்துடன், மாணாக்கர் தமது சொந்த அறிவினதும் திறமையினதும் அடிப்படையில் துலங்குவதற்கும, தமது அறிவாற்றல் திறன்களைப் பிரயோகிக்கவும் அவற்றை வளர்த்தெடுக்கவும் அவர்களுக்கு ஊன்றுகோலாக உதவுவது எழுத்துப் பரீட்சை முறையென்றால் அதில் மிகையொன்றுமில்லை.

ஆனால், ஒரு வகுப்பிலுள்ள 30 முதல் 35 மாணாக்கர்களின் பயிற்சிக் கொப்பிகளை ஆசிரியர் தாமே திருத்துவது என்பது கடினமான ஒரு பணி என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

### ஆசிரியர் திருத்துதல்

மாணாக்கரின் பயிற்சிக் கொப்பிகளை ஆசிரியர் திருத்துவதே மிகவும் சிறந்த முறை என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனால், பாடசாலையின் கற்பித்தல் நேரத்தினை இப்பணிக்குச் செலவிடுவது ஆசிரியருக்கும் மாணவர்க்கும் நேர விரயத்தை ஏறபடுத்தும் காரியமாகவே அமையும். எனவே, ஆசிரியர் அர்ப்பண சிந்தனையுடன் இத்தகைய திருதத வேலைகளைத் தமது ஓய்வு நேரத்திலோ அல்லது வீட்டுக்கு எடுத்துச் சென்றோ செய்ய வேண்டியவராக இருக்கிறார். இதனை ஆசிரியர் விதியாகக் கருதாது, விருப்புடன் செய்ய முன்வரல் வேண்டும்.

### மூத்த மாணாக்கரின் உதவியுடன் திருத்துதல்

தமது மாணாக்கரின் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்துவதற்கு ஆசிரியர் மேல்வகுப்பு மாணவர்களின் உதவியைப் பெறுதல் கூடும். ஆனால், இம்முறை பலரின் கண்டனங்களுக்கு ஆளாகக்கூடிய ஒரு முறை என்பதும் கண்கூடு. ஏனெனில், திருத்தங்களைச் செய்யும் உயர் வகுப்பு மாணாக்கர் தமது கற்கும் நேரத்தை இழக்கும் சந்தர்ப்பம் இதில் உண்டு. அதனுடன், திருத்துபவராகக் கடமையாற்றும் மாணாக்கர் சில வேளைகளில் பொறுப்புணர்ச்சி அற்றவர்களாகத் தவறான முறையில் அன்றேல் கவனமின்றி அன்றேல். நடுவுநிலைமை - நேர்மை ஆகியன அற்ற வகையில் திருத்தங்களைச் செய்தல் கூடும். இதன் விளைவாக, மதிப்பீட்டின் உண்மை நோககம் சிதைக்கப்படுவதுடன், பயிற்சிகளைச் செய்த மாணாக்கருக்குத் தமது பெறுபேறுகள் குறித்து ஓர் உறுதியற்ற எண்ணப்பாங்கு வளரவும் ஏதுவுண்டாகிறது.

### மாணாக்கர் தமக்குள் மாற்றித் திருத்துதல்

ஒரு குறித்த வகுப்பு மாணவர்கள் தமது பயிற்சிக் கொப்பிகளைப் பரஸ்பரம் மாற்றிக்கொண்டு திருத்தங்களைச் செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவது ஆசிரியர்களிடம் பரவலாகக் காணப்படும் ஒரு முறையாகும். இம்முறை மூலம் விரைவாகவும், ஏககாலத்திலும், சிறப்பாகவும் திருத்தங்களைச் செய்து முடிக்கவும் மாணாக்கர் தமது பெறுபேறுகளை அறிந்து கொள்ளவும் சாத்தியம் ஏற்படுகிறது. ஆனால், இம்முறையிலும் பலகுறைபாடுகள் இல்லாமல் இல்லை. கட்டுரை வினாக்களுக்கான விடைத்தாள்களை இம்முறையில் திருத்துவது சாத்தியமற்றது என்ற உண்மை ஒருபுறம் இருக்க, விடைகளைத் திருத்தும் மாணவர்கள் நேர்மையற்ற முறையில் செயற்படும் வாய்ப்பும் இதில் நிறையவே உண்டு என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம். இதன் பயனாக, மாணாக்கரிடையே சண்டை - சச்சரவுகளை ஏற்படுத்தவும் இம்முறை வழிகோலலாம். இதனால், வகுப்பில் வாக்குவாதங்களும் ஒழுங்கின்மையும் நிலவும் ஓர் உவப்பற்ற நிலைமை தோன்றக் கூடும்.

### மாணாக்கர் தாமே திருத்துதல்

கொப்பிகளைத் தமக்கிடையே மாற்றிக்கொள்ளாது, தத்தம் கொப்பிகளை மாணவர்களே திருத்த அனுமதிப்பதன் மூலம் மேற்கூறிய முறையில் பெறக்கூடிய அதே அனுகூலங்களை இம்முறையிலும் பெறஇயலும். ஆனாலும், இம்முறையிலும் கூடக் குறைபாடுகள் இருக்கவேசெய்கின்றன. முதலாவதாக, இம்முறையானது மாணவரின் நேர்மையான செயற்பாட்டுக்குப் பெரிய சோதனையாக அமைந்து விடுகிறது. மாணாக்கர் தமது பிழையான விடைக்குச் சரி என்று குறிக்கவோ அன்றேல், தமது பிழையான விடைகளைத் திருத்திக்கொண்டு அவ்வாறு செய்யவோ இங்கு வாய்ப்பு நிறையவே இருக்கிறது. இதனால், ஆசிரியர் தமது மாணாக்கரின் உண்மையான அடைவு மட்டத்தை உய்த்துணர முடியாதவராக ஆக இம்முறையில் இடமுண்டு.

ஆக மொத்தத்தில், ஆசிரியர் தாமே எல்லாப் பயிற்சிக் கொப்பிகளையும் திருத்தும் முறையே சிறந்தது என்பது நன்கு புலனாகின்றது. ஆனால், பொருத்தம் கண்டு, மேற்கூறிய பிறமுறைகளையும் போதிய எச்சரிக்கையுடனும் கண்காணிப்புடனும் ஆசிரியர் பயன்படுத்திப் பயன் பெறலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் மேற்பார்வையும் அறிவுறுத்தல்களும் போதிய அளவுக்கு இருப்பது மிகவும் அவசியமாகும். ★

செ.ரஞ்சன் செல்வகுமார
கலைமகள் மகா வித்தியாலயம்
நெளுக்குளம், வவுனியா.

# ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் முதல்முறையாகப் பேச்சு

ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடன் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் பேச்சு நடத்தினார். இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே இவ்வாறான ஒரு விசேட பேச்சு நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

ஐரோப்பிய சங்கத்தின் இன்றைய தலைவரான இத்தாலியின் வெளிவிவகார அமைச்சர் லெட்டினி இப்பேச்சுக்குத் தலைமை வகித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்தும் அதிலுள்ள குறைபாடுகள், பிரச்சினைகள் குறித்தும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை வலுப்படுத்துவது, அதன் மூலம் அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவது குறித்தும் அவர்கள் கருத்துக்கள் தெரிவித்தனர்.

# சமாதான முயற்சிகளுக்கு ஐஸ்லாந்து பூரண ஆதரவு

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஐஸ்லாந்து அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பை எதிர்காலத்தில் பெற்றுத்தருவதாக ஐஸ்லாந்து வெளிநாட்டு அமைச்சர் ஹேரால்டர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்தார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு செயற்பாடுகள் மூலம் ஐஸ்லாந்து வழங்கிவரும் உதவிக்கு பிரதமர் நன்றி தெரிவித்தபோதே ஐஸ்லாந்து அமைச்சர் மேற்கண்ட உறுதியை வழங்கினார்.

கடற்றொழில், கடல் வளத்துறை தொடர்பாக ஐஸ்லாந்தின் அனுபவங்களை இலங்கையுடன் பரிமாறிக் கொண்டு இலங்கையின் கடல் தொழில் துறையை வளர்ச்சி பெறச் செய்வது தொடர்பான செயற்றிட்டங்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் கருத்துப் பரிமாறிக்கொண்டனர்.

வர்த்தக மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் மேலதிகச் செயலாளர் சமன் அதாவுடஹெட்டி, வெளிநாட்டுச் செயலாளர் பேர்னாட் குணதிலக, ஐரோப்பிய சங்கத்தின் இலங்கைத் தூதுவர் ரொமேஸ் ஜயசிங்க ஆகியோரும் கருத்துப் பரிமாறலின் போது உடன் இருந்தனர். (ம)

## விவசாய பாட போட்டிகள்

தென்மராட்சி,செப்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான விவசாய பாட வினா விடைப் போட்டிகள் அடுத்த மாதம் நான்காம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் தலா இரு மாணவர்கள் வீதம் நான்கு மாணவர்களை போட்டிக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-117)

# கல்விச்சாலைக் காட்சிகள்



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் 'பாண்ட்' வாத்தியக் குழுவின் அரங்கேற்ற நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேனுகோபால் 'பாண்ட்' வாத்திய அரங்கேற்றத்தைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். அதிபர் திருமதி எஸ். கிருஷ்ணதாஸும் படத்தில் காணப்படுகின்றார். (எ)




மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுகாதாரப் பரிசோதகரும், மானிப்பாய் பரிஷ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான ப.சிவகுமார் நிலையக் கொடியை ஏற்றி வைப்பதைப் படத்திலும் காணலாம். அருகில் நிலையத் தலைவர் ஆ.ஐங்கரநேசனும் காணப்படுகின்றார். *(படம்: மானிப்பாய் செய்தியாளர்)*



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.கிருஷ்ணானந்தன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்:இணுவில் செய்தியாளர்)*

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்ற போது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்றுள்ள மாணவி ஒருவருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரனும் படத்தில் காணப்படுகிறார். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*






License No : 50445

BS No : 5413:1996
License No : KM41240

முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

Access Graphics

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 06 - 08 - 1933

விண்ணில் 30 - 08 - 2003



### அமரர் மிக்கேல் சூசைமுத்து

*மாதம் ஒன்று ஓடிப்போனாலும்*
*ஆறிடுமோ எம்துயரம் நீங்கிடுமோ உமதன்பு*
*உங்கள் நினைவால் வாடுகின்றோம்.*

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்காக சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் இன்று (29.09.2003) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றி மன்றாடும்படி கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இன்று நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமகன்மார்,
மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*
(23094) (25-11-18)

## இறை அனுபவத்திற்குள் நுழைய மீண்டும் ஓர் அழைப்பு

### அக்கினி பெருவிழா

**அருட்தந்தை - போல் றொபின்சன்**

அவர்களால் நடத்தப்படும்

### ஆராதனை வழிபாடுகள்

29.09.2003 திங்கட்கிழமை மாலை
6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை

30.09.2003 செவ்வாய்க்கிழமை மாலை
6.00 மணிமுதல் அதிகாலை 1.00 மணிவரை

இடம்: **யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயம்** (O.L.R.)

ஜெபித்து, பாடி, இறை அனுபவத்திற்குள் நுழைய வாரீர். யாழ். மேற்றிராசன அனைத்து பங்கு மக்களின் வசதிகருதி, இருதினங்களும் இலவச விசேட போக்குவரத்து சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

பேருந்துகள் புறப்படும் இடங்கள்: இளவாலை, சுன்னாகம், அச்சுவேலி, பருத்தித்துறை, மிருசுவில், ஊர்காவற்றுறை.

*தொடர்புகளுக்கு*
*உங்கள் பங்குத்தந்தையர்களை நாடவும்.*

*ஆயர் இல்லம்.* (22952) (25-11-18) - இறைதியானக் குழுவினர்.

## முற்பணக்கடன் விவரம் அனுப்ப கோரிக்கை

குருநகர்,செப்.29

வடக்கு - கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சுகாதாரத் திணைக்களம் மற்றும் அதன் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிகளில் சேவைபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச முற்பணக் கடன் விவரங்களை ஆண்டு ரீதியாக தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண சுகாதாரத் திணைக்களம் மாகாணத்தில் இயங்கிவரும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்விரங்கள் தயாரிக்கப்பட்டு இம்மாத இறுதியில் தமக்கு அவசியம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-57)

## மலசலகூடம் நிறுவ உதவி

அரியாலை,செப்.29

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்திற்கு சொந்தமான காணியில் குடியிருக்கும் மக்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கென முதற்கட்டமாக ஐந்து பைக்கற் சிமெந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்து கலாசார அமைச்சின் உதவியுடன் மேற்படி ஆலய பரிபாலன சபையினர் இந்த சிமெந்து பைக்கற்றுக்களை விநியோகம் செய்து வருகின்றனர். (எ-17)

## பரிசு தினம்

யாழ்ப்பாணம்,செப்.29

மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் அருட்சகோதரி செபஸ்ரியாம்பிள்ளை அழகேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார்.

(ஒ-5)

## கற்கை நெறிக்கான ஆலோசனை

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிதாக அனுமதிபெறுவோருக்கு சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறி குறித்த ஆலோசனைகள். கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள சித்திர பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும்-

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்தோர் இந்த ஆலோசனையைப் பெற்றுப் பயன்பெறலாம் என்றும் - நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார். (ஒ-5)


### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் :222 2459



### விற்பனையாளர் தேவை

எமது [illegible]த்துக்கு ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
கபிலா காலணியகம்,
இல.04, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(11-18) (23074)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சித்தன்கேணி ஸ்ரீ சாமுண்டா சமேத ஞானவைரவ பரிபாலனசபை ஆலோசகரும், கலைவாணி சனசமூக நிலைய போசகரும் ஆகிய

### திரு.சி.இரத்தினம்

அவர்கள் சமாதான நீதிவானாகப் பட்டம் பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவரது சேவை மேன்மேலும் தொடர அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கலைவாணி வீதி வாழ்மக்கள்,**
**சித்தன்கேணி.**

(23050) (25-11-18)

## (C.I.S.R.S) கருத்தரங்கு

தலைப்பு : **யாழ்.சமுதாயமும், கலாசார பிறழ்வும்**

தலைமை : **திரு.N.A.விமலேந்திரன்**
(அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை)

ஆசியுரை : **பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
(தென்னிந்திய திருச்சபை)

கருத்துரை வழங்குபவர் : **திரு.பொ.அருந்தவநாதன்**
(விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி)

இடம் : **யாழ்ப்பாணக்கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். வைத்தியசாலை முன்பாக)

காலம் : *29 செப்ரெம்பர் 2003 திங்கட்கிழமை பி.ப.3.30மணி*

நன்றியுரை : **வண.G.நடராஜா**
(C.I.S.R.S இயக்குநர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண.G.நடராஜா,
இயக்குநர்.
C.I.S.R.S

(23082) (25-11-18)

## நெஞ்சம் கலங்கி நிற்கும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் கையில் 04 - 01 - 1943

ஆண்டவன் அடியில் 01 - 10 - 2002



### அமரர் நாகமுத்து மார்க்கண்டு

திதி: 29.09.2003

குடும்பத்தின் குலவிளக்கே!
நேசமுடன் வளர்த்தெடுத்து
குடும்பத்தை உயர்த்த வெண்ணி
நல்ல அதிர்ஷ்டமென நாளும் மகிழ்ந்திருந்து
பாசக்கோட்டையைத் தேன்கூடாகக் கட்டினோம்
பொல்லாத காலமென சொல்லாமலே வந்ததுவே!
இம்மண்ணில் வாழும் வரை மறப்போமா
உன்முகத்தை? உன் கனவுகள்
எம் நெஞ்சங்களில் நினைவுகளாக!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோதர,
சகோதரிகள்.

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*
(22999) (25-11-18)


யசோ JASO

**புத்துலகப் பிரவேசம்-2003**

**கண்காட்சியில்...**

இடம்:வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம்: 27,28,29-09-2003

றபர் சீல்களை 10% விசேட கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

☎0777-110610

சிவப்பு, பச்சை, நீலம், ஊதா, கறுப்பு முதலான பல வர்ணங்களில் றபர் சீல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

Jaso (PVT) LTD,
*35,கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/30402) (11-18)

# இங்கு இருவேறு அரசுகள் செயற்படுவதை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது

## தியாகி திலீபன் நினைவு நிகழ்வில் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம்,செப்.29

இலங்கையில் இருவேறுபட்ட அரசுகள் செயற்படுவதை சர்வதேச சமூகம் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்.

கடந்த வெள்ளிக்கிழமை நல்லூரில் இடம்பெற்ற தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. ஒரு தேசிய இனம் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சுதந்திரத்தை பெறுவதற்கான போராட்டமே அதுவாகும்.

இந்தத் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசானது தமிழர்களுடைய அபிலாஷைகளைத் தீர்த்துவைக்கவேண்டும். குறிப்பாக தமிழர்களுக்கு சுயாட்சி உரிமையினை வழங்கவேண்டும்.

இந்த உரிமையைப் பெறுவதற்கு எமது முன்னைய தலைவர்கள் சாத்வீக ரீதியாகப் போராட்டங்களை முன்னெடுத்தனர். அந்தப் போராட்டங்கள் யாவும் சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப்பட்டபோதுதான் அது ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தது.

கடந்த காலங்களில் எமது பகுதிகளில் இடம்பெற்ற கொடூரயுத்தத்தின் மூலம் 17 ஆயிரம் விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். அதுமட்டுமல்லாது, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் எமது பெறுமதிவாய்ந்த உடைமைகளையும் இழந்துள்ளோம்.

இந்த யுத்தத்தில் எமது மக்கள் விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இதனால்தான் ஒரு நாட்டில் இரு வேறுபட்ட தலைமைகளை உடைய அரசுகள் உருவாகின. இந்த பிளவுபட்ட நாட்டை ஒன்றுபடுத்துவதற்கு சர்வதேச சமூகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் பல சுற்றுப்பேச்சுகள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், அப்பொழுது நடந்த பேச்சுக்கும் இப்பொழுது இடம்பெறும் பேச்சுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

முன்னைய காலங்களில் நாம் பலமற்றநிலையில் இருந்தமையால் சிங்கள அரசு எம்மை அடக்கி ஒடுகக முனைந்தது. ஆனால், அந்தநிலை இப்போது இல்லை. நாம் பேச்சு மேசையில் சம பலத்துடன் இருந்து பேசுகிறோம். இதனால், அரசு இப் பேச்சுக்களை புறந்தள்ள முடியாது திண்டாடுகிறது.

எமது நாட்டில் நிரந்தர சமாதானம் மலரவேண்டும் என்ற நோக்கில் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த உயர் மட்டத் தலைவர்கள் கொழும்பு வந்து அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுகின்றனர். அதேவேளை, கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்துகின்றனர். இதன் மூலம் இந்த நாட்டில் இரண்டு அரசுகள் உண்டு என்பதனை கொள்கை ரீதியாக அவர்கள் ஏற்றுள்ளனர் என்பது நன்கு புரிகிறது.

தமிழர்களுக்கு சுயாட்சி முறையிலான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேசமும் தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகளும் விரும்பம் கொண்டுள்ளனர்.

அந்த அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் தற்போது பல நாடுகளுக்கு சென்று பலதரப்பட்ட சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து புதிய இடைக்கால திட்ட வரைவு ஒன்றினைத் தயாரித்துள்ளனர். அந்த வரைவை அரசிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னரே தென்பகுதி அரசியல்வாதிகள் அதற்கு எதிர்ப்புக் கொடி காட்டத் தொடங்கிவிட்டனர். இதற்கு சர்வதேச சமூகம்தான் சரியான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் அதில் எந்த வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. எனவே, அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாக அலகை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் எமது போராட்டத்தைப் பற்றி மக்கள் தெளிவான இலக்கினைக் கொண்டிருக்க வேண்டும். நியாயமான இந்தப் போராட்டத்தில் நாம் அனைவரும் பங்கேற்கவேண்டும்.

அப்போதுதான் இந்த மண்ணின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களும் தியாகி திலீபனும் கண்ட கனவுகள் நனவாகும்.

எமது உரிமைப் போரை நாமே வென்றெடுப்பதற்கு நாம் அனைவருமே அணிதிரள்வோம் - என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-5-6)

# நோர்வே ஆலோசகர் புலிகளுடன் சந்திப்பு

மட்டக்களப்பு,செப்.29


இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கான நோர்வேயின் ஆலோசகர் கெய்சர் பேர்க் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவரும் மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் கரடியனாற்றுக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் சந்தித்துப் பேசினர்.

சந்திப்பின்போது புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டதால் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. எனினும், சமாதானப் பேச்சுக்களை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு எமது இயக்கத்தின் தலைமைப்பீடம் நடவடிக்கை மேற்கொள்கிறது.

நாம் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை வலுப்படுத்தவே முயற்சிக்கின்றோம். இதற்காக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பலவகையான பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். இவற்றை முஸ்லிம் பிரதிநிதிகள் வரவேற்றுள்ளனர்.

- இப்படி அவர் கூறினார்.



பகவான் சத்தியசாயி கல்வி அமைப்பின் பேராசிரியர் கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் மனித விழுமியங்கள் பற்றிய கல்விச் செயலமர்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது. பேராசிரியர் சிவஞானசுந்தரம் உரையாற்றுவதையும், கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன், வளவாளர் சரவணபவானந்தன், கணேசமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

# 'நெருப்பாற்று நீச்சலின் பத்தாண்டுகள்' நூல் வெளியீடு யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம்,செப்.29

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவினரின் வரலாறுகளை உள்ளடக்கிய 'நெருப்பாற்று நீச்சலின் பத்தாண்டுகள்' என்ற நூல் யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு வெளியிடப்படுகிறது. அன்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த வெளியீட்டுவிழா இடம்பெறவுள்ளது.

சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் களமுனைத் தளபதிகளில் ஒருவரான அமுதாப் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை லோறன்ஸ்'ம், சிறப்புரையை யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஆற்றுவர்.

நூலின் வெளியீட்டு உரையை கலைக்கோனும் மதிப்பீட்டுரையை கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் சோ.கிருஷ்ணராசாவும் வழங்குவர்.

இந்நூலில் தேசியத் தலைவரின் ஆசிச்செய்தியுடன் லெப்.சாள்ஸ் அன்ரனி பற்றிய வரலாறும், இப்படைப் பிரிவினா கடந்த 10ஆண்டுகளாக மேற்கொண்ட தாக்குதல் விவரங்கள், இந்தப் படையணியிலிருந்து வீரச்சாவடைந்த 5 தளபதிகளின் சரிதங்களும் இப்படையணியில் இருந்து வீரகாவியமான கரும்புலிகள் மற்றும் மாவீரர்களின் விவரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

இந்த நூல் கிளிநொச்சி உட்பட பிறஇடங்களிலும் இதேதினத்தில் வெளியிட்டு வைக்கப்பட உள்ளது. (ஒ-5)

# சதிப்புரட்சியை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி. கனவிலும் கருதக்கூடாது

## உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, செப்.29

ஜே.வி.பியினர் நாட்டில் மீண்டுமொரு சதிப்புரட்சியை மேற்கொண்டுள்ளனர். அத்தகைய சதிப்புரட்சியை சமாளிக்க அரசு தயாராகவே உள்ளது. எனவே, ஜே.வி.பியினர் சதிப்புரட்சி மேற்கொள்ள கனவில் கூடக் கருதக்கூடாது.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

- கடந்த 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

எனினும், ஜே.வி.பியினர் அமைச்சரின் கூற்றை முற்றாக நிராகரித்தனர். அத்துடன், ஜே.வி.பி. சதிப் புரட்சி மேற்கொள்ள முயற்சிப்பதை நிருபிக்குமாறும் அவர்கள் அமைச்சரை வலியுறுத்தினர்.

"வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்கம் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

பட்டதாரிகள் அண்மையில் மாத்தறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது அவர்களைத் தாக்கியவர்களை இனம்கண்டு தண்டனை வழங்கவேண்டும் என்றும் - பொ.ஐ.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர முன்வைத்த ஒத்திவைப்பு விவாதத்தின்போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

சமீபத்தில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலை மாணவர்கள் தாக்கப்பட்ட போது தாக்கியவர்களில் ஐ.தே.க. அரசியல்வாதியின் வாகனச் சாரதி ஒருவரும் காணப்பட்டார் எனவும் - அமரவீர குற்றஞ்சாட்டினார்.

மாத்தறை சம்பவத்தில் சில பொலீஸார் உட்பட சுமார் 150 பேர் வரையிலான காடையர்கள் சென்று இரக்கமற்ற முறையில் பட்டதாரி ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இக்குற்றச்சாட்டுகளை மறுத்த உள்துறை அமைச்சர் 30 பேர் வரையில் - அதுவும் தூர இடங்களிலிருந்து வந்தவர்கள்தான் - அத்தாக்குதலை நடத்தினர் என்று கூறினார்.

அந்தத் தூர இடம் என்பது 'கோட்டைதான்' என்று கிண்டலாக ஜே.வி.பி. உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய உள்துறை அமைச்சர் மாத்தறை மற்றும் ஜயவர்த்தனபுர சம்பவங்களில் யார் ஈடுபட்டார்கள் என்று தன்னால் கூறமுடியாது. அவர்களை பிடிப்பதற்கு முழு அளவிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறினார்.

அதனை அடுத்து மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தமது உரையின்போது 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நடவடிக்கைக்காக 10 லட்சம் டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் -

குறைந்தபட்சம் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு கட்டாயமாக விரைவில் வேலைகள் வழங்கப்படும். அதற்காக வேலையற்ற பட்டதாரிகளுக்கு முக்கிய சிலதுறைகளில் பயிற்சிகள் வழங்குவதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# தடயப்பொருளான நகைகளை திருடிய நீதிமன்ற ஊழியர் கைது!

கொழும்பு,செப்.29

கொழும்பு நீதிவான் நீதிமன்றக் களஞ்சிய அறையில் வழக்குத் தடயப் பொருள்களாக பாதுகாக்கப்பட்டு வந்த 23 பவுண் எடையுள்ள தங்க ஆபரணங்களைத் திருடிய குற்றஞ்சாட்டின் பேரில் அதே நீதிமன்றைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்டதாகக் கூறப்படும் நகைகளை கொழும்பு செட்டித்தெருவிலுள்ள நகைக் கடையொன்றில் இந்நபர் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபாவிற்கு விற்க முயன்ற சமயம் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். இந்த நபரைப் பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் செய்ததையடுத்து அந்நபரை அடுத்த மாதம் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ)

# 10 கோடி ரூபா மோசடி குறித்து முன்னாள் கல்வி அதிகாரி கைது

கண்டி,செப்.29

சுமார் 10 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக முன்னாள் கல்விப்பணிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் சுமார் 10 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டமை சமீபத்தில் தெரியவந்தது. இது தொடர்பாக மத்திய மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஆர்.சி.குணவர்த்தனவைக் கைது செய்துள்ளனர்.

இத தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் ரகசியப் பொலீஸார், மேற்படி மோசடியில் ஈடுபட்டதாகக் கருதும் மேலும் சிலரைத் தாம் கைது செய்ய உள்ளதாகக் கூறினர்.




உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பருத்தித்துறை பிரதேச சபையால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி உரையாற்றுவதையும் அருகில் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் அ.நடராசா உட்பட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

### சமயநூல் இலவச வெளியீடு

சுழிபுரம்,செப்.29

நவராத்திரி, கேதாரகௌரி விரத தினத்தையொட்டி அபிராமியந்தாதி மற்றும் கேதாரகௌரி விரதப் பாடல்கள் ஆகியவற்றை வழக்கம்பறை பஜனை சபை இலவசமாக வழங்கி வருகிறது. இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் வழக்கம்பறை முத்துமாரி அம்பாள் ஆலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-28)

### கணித விஞ்ஞான புதிர்ப்போட்டி

தென்மராட்சி,செப்.29

தென்மராட்சி கல்விவலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கணித, விஞ்ஞான பாட புதிர்ப்போட்டி அடுத்த மாதம் 9ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கிடையிலான எழுத்துப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை இதில் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை செல்வி மதிவதனி மகேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி மகேந்திரன்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி.

*கொக்குவில்.*
(சி-30409) (25-11-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 09 - 1932



ஆண்டவன் அடியில் 10 - 10 - 2002

**திருமதி கௌசலாதேவி தணிகாசலம்**

திதி: சதுர்த்தி (29.09.2003)


*ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட நீ – எம்*
*அருகிலில் இருக்க மகிழ்ந்திருந்தோம் – நிறைவாக*
*ஓராண்டு சென்றாலும் உன் பொன்முகம் மறவோம் அம்மா*
*'இளையம்மா', 'வெள்ளையம்மா', 'மாமி' என இனியாரை அழைப்போம்?*

அன்பு மனைவியாகவும், அருமை இளையம்மாவாகவும், பாசமிகு மாமியாகவும், நேசமிகு பேர்த்தியாகவும், எல்லோர்க்கும் அன்பு காட்டிய குலக்கொழுந்தே, உங்கள் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியடைய எல்லாம்வல்ல தில்லைக் கூத்தனை இறைஞ்சுகின்றோம்.

கணவர், சகோதர, சகோதரியர், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*'தாயகம்', சந்தை வீதி, உடுப்பிட்டி.*
(22950)

## துயர் பகிரும் நிகழ்வு



**சிவசம்பு ராஜ்மோகன்**

21.09.2003 அன்று லண்டனில் அகாலமரணமான அன்னாரின் துயர் பகிரும் நிகழ்வு NO.7, FAIRLINE LANE, DEHIWALE இல் உள்ள மாமாவாகிய திரு.வ.வேலாயுதபிள்ளை அவர்களின் இல்லத்திலும், பாரதி வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள பேர்த்தியாரான திருமதி கு.இராசபூரணம் அவர்களின் இல்லத்திலும் நாளை (30.09.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பாரதி வீதி,
நாயன்மார்கட்டு.
*T.P.No. யாழ். - 0777 110742*
*கொழும்பு - 012 713470*

திருமதி கு.இராசபூரணம் (பேர்த்தி).
(23098) (24-18-11)

## மரண அறிவித்தல்

**சிவசம்பு ராஜ்மோகன் (மோகன்)**

(யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவன்)

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவம்பு ராஜ்மோகன் அவர்கள் 21.09.2003 ஞாயிற்றுக்கிழமை லண்டனின் அகாலமரணமானார்.

அன்னார் சிவசம்பு (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதியம்மா (வேபி) தம்பதிகளின் அன்பு மகனும் வித்தியாரூபி, வினோதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நிதிலாவின் அன்பு மாமனும் லோகதாஸின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2003) செவ்வாய்க்கிழமை லண்டனிலுள்ள HANWORTH CREMATORRIVM, MIDDLEHES TW 13, 5JH என்னும் மண்டபத்தில் 11.00மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*பாரதி வீதி,*
*நாயன்மார்கட்டு.* (23099) (26-24-18-11)

திருமதி கு.இராசபூரணம் (பேர்த்தி).

# நடந்து முடிந்த சமாதான....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

படக்கூடும். அத்தகையதொரு நிலையிலேயே அரசுக்கும், தென்பகுதி அரசியல் அதிகாரவர்க்கத்துக்கும் சிற்சில சிரமங்கள் உருவாகக்கூடும். உதாரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பு திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே பேச்சுகள் மேற்கொண்டு தொடரப்படவேண்டுமெனக் கோரினால் தென்பகுதி அரசியல் அதிகார வர்க்கத்தினருக்கு மீண்டுமொரு தடவை திம்புக்கோட்பாடுகள் குறித்து பரிசீலிக்கவேண்டி ஏற்படும். தமிழ்மக்கள் தனியானதொரு இனப்பிரிவினராகக் கருதப்படவேண்டுமென்பது திம்புத் தீர்மானங்களில் ஒன்றாகும். அதனை ஏற்றுக்கொள்வதானால் ஒரே அரசின் கீழ் இருவேறு இனங்கள் என்ற கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதனைத் தற்போதைய நிலையில் தென்பகுதி அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமெனத் தோன்றவில்லை. அதற்கடுத்தது தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை என்ற விடயமாகும். மூன்றாவது விடயம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலப்பிரதேசம் எனக்கூறப்படுவதாகும். மேற்கூறிய திம்புத் தீர்மானங்களுக்கு மேலதிகமாக வேறொரு விடயமும் பிரச்சினையை உருவாக்கக்கூடும்.

எதிர்காலத்தில் சமஷ்டி முறையின் கீழ் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்படும் நிர்வாக அதிகாரம், நாட்டின் ஏனைய பிரிவுகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை விடக்கூடியதாக அமையவேண்டும் என விடுதலைப் புலிகள் கோரக்கூடும். இதனைச் சாதாரணமாக நாம் 'சீரற்ற அதிகாரப்பகிர்வு' என்ற விதத்தில் அழைக்கலாம். பெரும்பாலும் விடுதலைப் புலிகள் அமைப்பு இவ்வித ஆலோசனைகளையும் முன்வைக்கக்கூடும்.

மூன்றாவதாகக் குறிப்பிடக் கூடியது இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவதில் சிக்கல் ஏற்படுமானால், அவ்வேளையில் விடுதலைப் புலிகள் அமைப்பு முன்வைக்கும் இறுதி ஆலோசனையாக - அதாவது பொ.ஐ. முன்னணியினரும், ஜே.வி.பியினரும் அடிக்கடி வற்புறுத்திவரும் - இனப்பிரச்சினைக்கான அடிப்படை காரணங்களுக்குத் தீர்வு காணலென்ற வகையில் நாட்டின் அரச நிர்வாக முறையில் முன்னேற்றகரமான மாற்றங்களுடனான மீளமைப்பு அவசியமெனக் கோரக்கூடும். தமிழர்கள் தரப்பில் எவரும் இக்கோரிக்கையை முன்வைக்கக்கூடும் என நான் நினைக்கின்றேன். பாரிய அளவிலான நிர்வாக முறை மாற்றமொன்றை உருவாக்குவதன் மூலமாகவன்றி சிறுபான்மையினரான தமிழ்மக்களால் அவர்களது சமஉரிமை, சமநீதி மற்றும் அரசியல் உரிமைகளை அடையமுடியாதென்பதை புலிகள் தெரிந்துகொண்டுள்ளனர். சிங்கள சமூகத்தின் அரசியல் நடைமுறை மற்றும் அரசமைப்பு விதிகள் யாவும் குறுகிய நோக்கங்கொண்டவையாக அமைந்திருப்பதே இப்பிரச்சினைக்குரிய காரணமாகும். ஆகவே, தென்பகுதி அரசியல் தலைவர்கள், அரசியல் துறைசார் விற்பன்னர்கள் மற்றும பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடுவோர் ஆகியவர்களிடையே இதன் காரணமாகப் பிரச்சினைகள் உருவாகக்கூடும். ஆகவே, அரசியல் பிரிவுகளாகக் கருதப்படத் தக்க ஸ்ரீ.ல.சு. கட்சி, ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. உட்பட்ட சகலரும் இப்போதிலிருந்தே புதிதாகத் தம்முள் பேச்சுகளை ஆரம்பிப்பதே தற்போது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய நடவடிக்கையாகும். அவ்விதம் ஒன்றுகூடி விவாதித்து நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழிவகைகள் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டியது அவசியத் தேவையாகிறது. உடன்பாடுகள் எவ்வகையில் எட்டப்படவேண்டும் என்பன குறித்த பொறுப்பான சிந்தனை சிங்கள சமூகத்தினிடையே இதுவரை காணப்படவில்லை.

### பேச்சு தொடருமா?

*கேள்வி:* தற்போதைய அரசியல் நிலைவரப்படி அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரிடையே மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் சாத்தியமுண்டா?

*பதில்:* பெரும்பாலும் அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. ஆனால் அது சர்வதேச சமூகம் நம்பும் விதத்தில் அமையப்போவதில்லை. விசேடமாக விடுதலைப் புலிகள் அமைப்பை பேச்சு மேசைக்கு தள்ளிக்கொண்டு செல்ல ஜப்பான் முயல்கிறது. ஆனால் அது கைகூடப்போவதில்லை. ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சி ஆகிய தரப்புக்கள் தம்மிடையே பேச்சுக்களில் ஈடுபட்டால் அதில் ஜே.வி.பி. தனது ஆற்றலை கௌரவமான வகையில்தான் காப்பாற்றிக்கொள்வதாக மதிப்பிடுகிறது. அவர்களிடையேயான பேச்சுகள் ஜே.வி.பியினரின் இத்தகைய மதிப்பீடு காரணமாகவே தோல்வியுற்றன. விடுதலைப் புலிகள் அமைப்பிடமும் அவ்வகை நிலைப்பாடே காணப்படுகிறது. ஆகவே அவர்களைப் பேச்சு மேசைக்குத் தள்ளிச்செல்வது அத்துணை இலேசான காரியமல்ல. அவர்கள் தமது தீர்மானங்களைச் சுதந்திரமாகவே மேற்கொள்கின்றனர். சர்வதேச உதவி என்ற போர்வையில் வங்கிக் காசோலைப் புத்தகம் மூலம் புலிகள் மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக ஆராய்வு மேற்கொள்ள நீண்ட காலத்தைச் செலவிட நேர்வது பலருக்குப் பிரச்சினையானதொரு விடயமாகியுள்ளது. சர்வதேச சமூகம், பொ.ஐ.முன்னணி மற்றும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த சில பிரமுகர்கள் ஆகிய தரப்பினரிடம் அவ்வித மனோநிலை காணப்படுகிறது. தற்போதைய சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிலைப்பாடு குறித்து விரிவாக ஆராயப்படவேண்டியது அவசியமாகும்.

அவ்வாய்வின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுகளுக்கு முன் வந்ததேன்? என்ற வினா எழுப்பப் படுகிறது. செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து உலகநாடுகள் மட்டத்தில் உருவான பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படும் முயற்சியின் விளைவாகவே விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுக்கு முன்வந்ததாக பலர் கருதுகின்றனர். அவ்வித மனப்பான்மையுடன் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு பேண முற்படுதல் தவறான அணுகுமுறையாகும். ஜப்பான் அவ்விதம் தவறான கருத்துடனான மனப்பான்மையுடன் விடுதலைப் புலிகள் அமைப்பை நோக்குவதாகப்படுகிறது. விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் சர்வதேச சமூகத்தின் தீமானங்களை மட்டும் கருத்திற்கொண்டு தமது முடிவுகளை மேற்கொள்வரென எனக்குத் தோன்றவில்லை. ★

**விற்பனையாகின்றது!**

அலை
உன்னை சரணடைந்தேன்
திருடா திருடி
**VCD Songs**
விலை90/- மட்டுமே!
கிடைக்குமிடங்கள்:-
✱ கரன் றேடியோ & வாச் கஸ்தூரியார் வீதி, யாழ்.
✱ வீடியோ ஆனந்த் மானிப்பாய்.
✱ ஸ்ரீ விநாயகர் வீடியோ வழக்கம்பரை, சுழிபுரம்.
(26-24-11-18) (23100)

**NORTH EAST TECHNOLOGIES[NET],**

No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA
Tele: 021- 2223786, 0777-708498(Hot line), fax: 021 - 2226077
Web site: www.net.slt.lk



Computers to suit your BUDGET

CADDY SHACK

Computers made In

NEW ARRIVALS FROM USA

| | | | |
|---|---|---|---|
| P I - 166Mhz | 1.2GB HDD | 32MB RAM | Rs. 13,500/= |
| P I - 200Mhz | 2.1GB HDD | 32MB RAM | Rs. 15,700/= |
| P II - 233Mhz | 3GB HDD | 64MB RAM | Rs. 18,700/= |
| P II - 266Mhz | 3GB HDD | 64MB RAM | Rs. 19,800/= |
| P II - 300Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 21,700/= |
| PII - 333Mhz | 3.2GB HDD | 64MB RAM | Rs. 22,200/= |
| P II - 350Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 23,400/= |
| P III - 450Mhz | 4GB HDD | 64MB RAM | Rs. 32,700/= |
| P III - 550Mhz | 6.4GB HDD | 64MB RAM | Rs. 36, 200/= |
| P III - 600Mhz | 10GB HDD | 64MB RAM | Rs. 39, 900/= |

*THE PRICE IS ALL INCLUSIVE OF15" SVGA COLOUR MONITOR, BRAND NEW KEY BOARD& MOUSE,PAD, MULTI MEDIA PACKAGE OF 32X CD ROM, SOUND CARD & BRAND NEW SPEAKERS*

**Computer Accessories at attractive prices**

**BRAND NEW MACHINES P-IV-1.2, 1.6,1.8, 2.4.**

24மணி நேர குளிரூட்டப்பட்ட Internet Browsing Centre- Rs.40/= per hour
செலுலர் தொலைபேசி விற்பனை, சேவை, திருத்தவேலைகள்,
unlocking வசதிகள், Net working, LAN.WAN, SOHO, Net2Phone ஆலோசனைகள்
வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் திருமண மற்றும் வைபவங்களை ஒரே நேரத்தில் கண்டுகளிக்க.
Web designing மற்றும் ஆலோசனைகள்
VHS to CD copying வசதிகள் மற்றும் Photo copy, Fax வசதிகள.
Net2Phone- Rs.7/= per min.
(C-30411) (24-11-18)

## எய்ட்லைன்ஸ் வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்

*வாகன சாரதிகளுக்கான மருத்துவ பரிசோதனைச் சான்றிதழ்*

i. கனரக, மற்றும் அனைத்துவகையான மோட்டார் வாகன சாரதிகளுக்கான மருத்துவ சான்றிதழ் **(New Applicants)**
ii. ஏற்கனவே அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கான மீளாய்வு மருத்துவ பரிசோதனையும் **(Renual)**
iii. பெருந்தெருக்கள் அனுமதி **(Route Permit)**

**மேற்கூறப்பட்ட மருத்துவ பரிசோதனைச் சான்றிதழ்கள்**
**"எய்ட்லைன்ஸ் மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை நிலையம"**
(யாழ். போதனா வைத்தியசாலை **O.P.D.** முன்பாக)

இலங்கை தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தினாலும், இலங்கைப் போக்குவரத்து அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரி **திரு.ந.அரவிந்தன் (M.B.B.S. Srilanka)** அவர்களால் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்படும்.

**ஆரம்பம் : 30.09.2003 (செவ்வாய்) காலை 8.30**

முக்கிய குறிப்பு :
★ மேற்படி சான்றிதழ்கள் "எய்ட்லைன்ஸ்" வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையத்தில் மட்டுமே வழங்கப்படும்.
★ குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களே ஒரு நாளில் பரிசோதிக்கப்படுவர்.
★ வைத்திய அதிகாரி மேற்படி நிலையத்தில் தினசரி கடமையாற்றும் நேரம் நிலையத்தின் வாசலில் அறிவிக்கப் பட்டிருக்கும்.
★ ஆய்வுகூட, ECG, 'X' கதிர் பரிசோதனைகள் தேவைப்படுமிடத்து மேற்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களை **"எய்ட்லைன்ஸ"** காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(23111) (31-12-17) **- நிர்வாகி.**

---

உ
சிவமயம்

## கிரஹயக்ஞ அழைப்பும் நன்றி நவிலலும்

**18.09.2003 அன்று சிவபதமடைந்தவரான எமது அன்னை**
**திருமதி கனகசபாபதி ஐயர் மகேஸ்வரி அம்மா அவர்களின்**

வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (30.09.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து எமது அன்னையின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு, நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்பு அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இரங்கற் பிரசுரம் அச்சிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிய அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


*18,துரைராஜா வீதி,*
*வண்ணார்பண்ணை*
*யாழ்ப்பாணம்.* (23096) (12-17-31)

–சிவஸ்ரீ.க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் (மகன்).

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
27 - 11 - 1972



உதிர்வு
16 - 08 - 2003

### அமரர் சின்னத்துரை மகேசன் (குட்டி)
(கண்டாக்கர்)

மனிதருள் மாணிக்கமாய்த் திகழ்ந்த மகேசனே!
புனிதமாய் வாழ்ந்து நல்ல புகலிடம் தேடினீரோ?
இனி என்ன செய்வோம்? ஏங்கியே துடிக்கின்றோம்!
அகால மரணச் செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியதே!

இன்று (29.09.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெறுகின்ற ஆத்மசாந்திப்பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பலாலி வீதி,*
*இராமகிருஷ்ணா லேன்,*
*கோண்டாவில் கிழக்கு,* (23107) (12-17-31)

– குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கைலைநாதன்
(சீமெந்து, கூட்டுத்தாபனம்)

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனை 30,3/3, கல்பத்தை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து கைலைநாதன் 27.09.2003 சனிக்கிழமை அன்று, காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-மனோன்மணி தம்பதியினரின் புதல்வனும் திரு.திருமதி இசைவல்லார் குப்பிளான் செல்லத்துரையின் மருமகனும் சரஸ்வதி மனோகரியின் (உதவிக் கல்விப்பணிப்பாளர்) அன்புக் கணவரும் நாகராஜன், ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மகாதேவி, நாகரெட்ணஅம்பாள் (கிளி), காலஞ்சென்ற இராமநாதன் (பொறியியலாளர்), புனிதவதி (குஞ்சு நோர்வே), வைத்தியகலாநிதி பூலோகநாதன் (லண்டன்), பாலாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைத்தியகலாநிதி மூத்த தம்பி, தியாகராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), புஸ்பராணி (லண்டன்), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற லிகிதர்), வைத்திய கலாநிதி பரமேஸ்வரி (லண்டன்), சிவக்குமார் (சட்டத்தரணி, லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2003 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையிலிருந்து தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*
(23113) (29-12-17-31)

தகவல்:
கோ.தியாகராஜா
(மைத்துனர்).

---

## முன்பள்ளி விளையாட்டு விழா

சங்கானை உருத்திரா முன்பள்ளியும் விசிட்டி முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானை கலாசார மண்டப முன்றலில் நடைபெறவுள்ளது.

உருத்திரா சனசமூக நிலையத் தலைவர் ப.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர் எஸ்.மெய்யழகனும், கௌரவ விருந்தினராக வலி.மேற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கேமாசிவசோதி, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநேயன் மற்றும் சங்கானைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-5,29)

★ ★ ★

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின்கீழ் வரும் பிரான்பற்று ஸ்ரீமுருகன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பிரான்பற்று கலைமகள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு உதவிச் செயலாளர் சி.செல்வராசாவும்கலந்துகொள்வார்.(எ-185)

## உதைபந்தாட்டம்

வேலணை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 3ஆம் இடத்திற்கான போட்டி மற்றும் இறுதிப் போட்டி என்பன இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (எ-86)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வடமராட்சி கழகங்களுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் திக்கமுனை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிபற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - கலைவாணி வி.க. அணி எதிர் நவசக்தி வி.க. 'பி' அணி.

★ பிற்பகல் 4 மணி - 'கலட்டி. வி.க. எதிர் கெருடாவில் மத்தி வி.க. (எ-5)


**BRIGHTMAN**
நாவலர் வீதி யாழ். நகர்.
கணக்கீடு
PAPER CLASS
★ By:கலைச்செல்வன்
ஆரம்பம்: 29-09-2003
அலகு ரீதியான மீட்டல் Mon.4.00p.m
(23101) (12-17-31)

லஷ்சுமி சினிமா
இணுவில்
விக்ரம், ஜோதிகா, ரீமாசென் மற்றும் பலர் நடித்த
தூள்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே)

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன், ஸ்ரீமான் நடித்த
ராமச்சந்திரா
காட்சிகள் :-
10.30, 1.30, 6.30, 9.30 (பி.நே.)

நிறைஞ்சனாஸ்
விஜய், ரம்பா, குஷ்பு நடித்த
மின்சாரக்கண்ணா
காட்சி நேரம் : 11.00, 1.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
STRATEGIC COMMAND
இரவு 8.45 (பி.நே.)

நாகம்ஸ்
சுன்னாகம்

விக்ரம், திரிஷா, விவேக் மற்றும் பலர் நடிப்பில்
சாமி
(ரீல்ஸ்)
காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)


---

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
19 - 09 - 1940



மறைவு
14 - 09 - 2003

### அமரர் அழகரத்தினம் திருஞானசம்பந்தர்

**ஒளிவீசிப் பிரகாசித்த பாசதீபமான அன்புத் தெய்வமே!**
**ஒளியிழந்து போயிற்றே எமதில்லம் உம்பேரிழப்பால்**
**அன்புக்கோர் இருப்பிடமாய் பண்புக்கோர் உறைவிடமாய்**
**இன்பத்தையே எமக்களித்தீர் எங்குற்றீர் எமைவிட்டு!**
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (29.09.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*கந்தரோடை வீதி,*
*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (23103)(12-17-31)

- குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாதன் செல்லம்மா

காரைநகர், விளானையைப் பிறப்பிடமாகவும் இல.7, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாதன் செல்லம்மா நேற்று (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி தில்லைநாதன் (முன்னாள் சுகாதார திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கொட்டடி நமசிவாய வித்தியாலய ஸ்தாபகரும் முன்னாள் தலைமை ஆசிரியருமாகிய வீரகத்தி சட்டம்பியார், காலஞ்சென்ற ஞானம்மா ஆகியோரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற இராமநாதர் முத்துகுமாருவின் (ஆயுர்வேத வைத்தியர்) அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுகிர்தரத்தினம், வீரகத்தி கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் திருமதி யோகேஸ்வரி (கூட்டுறவுப்பரிசோதகர், கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), கிருஸ்ணமூர்த்தி (நில அளவையாளர், கொழும்பு), காலஞ்சென்ற கதிர்காமநாதன் (முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் விவேகானந்தன் (தலைமை காரியாலய பரிசோதகர் கூட்டுறவுத் திணைக்களம், வவுனியா), உமாதேவி, இந்திராணி ஆகியோரின் அருமை மாமியாரும் ஜனகன் (கொழும்பு, இந்துக்கல்லூரி), ஜனார்தன் (கொழும்பு, இந்துக்கல்லூரி) ஆகியோரின் அருமை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ். கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.7, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (சி-30413) (31-12-17)

தகவல்:
தி.கிருஸ்ணமூர்த்தி (மகன்).

### திருநாவுக்கரசு பொன்னுத்துரை

வதிரியைச் சேர்ந்தவரும், காலி நியூபூட் எம்போறியம் பங்காளருமான திருநாவுக்கரசு பொன்னுத்துரை (கனுமுதலாளி) நேற்று (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மண்டலேஸ்வரியின் அன்புக் கணவரும் கி.திரவியசிங்கம், கி.கிருஷ்ணானந்தன் ஆகியோரின் மைத்துனரும், பொன்ராஜன், பொன்னரசன் (கனடா), பொன்னரசி (ஆசிரியை, பொலிகண்டி இ.த.க.பாடசாலை), பொன்மலர் (பிரான்ஸ்), ஸ்ரீபவானி (கனடா), மஞ்சுளா (எழுதுவினைஞர், பிரதேச செயலகம், திம்பிறகாராய) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பவானி, மீரா (கனடா), குணசேகரன், செளந்தரராசன் (பிரான்ஸ்), செல்வராஜா (கனடா), தவராஜா (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், திவ்யா, இந்துஜா, லக்சிகா - ஹரிஷ்மா (கனடா), நிவேதிகா, பிரதிக்கா, பௌர்ணிகா, குருஷனா - ஆதர்சன் (பிரான்ஸ்), நிருஷன் (கனடா), அட்ஷயா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியை ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*பவானி வாசம்,*
*வதிரி.* (சி-30414) (31-12-17)

தகவல்:
பொ.பொன்ராஜன்.

### திருமதி சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி

மீசாலை கிழக்கைச் சேர்ந்த, திருமதி சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி அவர்கள் நேற்று (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் செல்வி மகேஸ்வரி (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம்), மகேஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தயாரும் மீசாலை மேற்கைச் சேர்ந்த அமரர் குமாரவேலு உபாத்தியாயரின் அன்பு மகளும், திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம், அமரர் பரராஜசேகரம் அவர்களின் அன்புச் சகோதரியும், மகேந்திரத்தின் அன்பு மாமியாரும், பிரசாந்தன் தர்சிகா, லோஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்றுலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (23109) (26-12-17)

தகவல்:
மகேஸ்வரி.

# உயர் பாதுகாப்பு வலய விவகாரம்: எம்.பிக்கள் போராட வேண்டும்!

## வலி. வடக்கு வெகுஜன அமைப்புக்கள் கோரிக்கை

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரும் வரை தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை முன் னெடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரியிருக்கிறது.

வலி.வடக்கு வெகுஜன அமைப்பு களின் ஒன்றியத்தினருக்கும் தமிழ் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்குமான சந்திப்பு நேற்றுக் காலை 10.30 மணியளவில் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்ட பத்தில் தலைவர் சி.சிவமகாராசா தலை மையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் தமிழ்க்கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்க ளான மாவை சேனாதிராசா, பொன் னம்பலம் கஜேந்திரகுமார், ந.ரவிராஜ், க.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் வலி காமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.வே.தமிழ்மறவன், தெல் லிப்பழை, உடுவில் பிரதேச பொறுப் பாளர்களான க.ஜனா, கரமனன் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக் கள் குடியமர்வதற்கு இராணுவம் தொடர்ந்து சமாதான காலத்திலும் தடைவிதித்து வருகின்றமையால் இடம் பெயர்ந்த மக்களின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வது என வும் இந்த வழக்குகளை சட்டரீதியாக வழிநடத்துவதற்கு கொழும்பு சிரேஷ்ட சட்டத்தரணி கணேசலிங்கத்தை நிய மிப்பது எனவும் அங்கு தீர்மானிக்கப் பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர் பாகப் போராட்டங்களை முன்னெடுப் பதற்கென ஏனைய வெகுஜன அமைப் புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிக ளையும் இணைத்து செயற்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பது குறித்தும் அங்கு ஆராயப்பட்டது. (ஐ-9-86-150)

### சமாதானச் செயலணி விஸ்தரிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சமாதானச் செயலகத்தில் ஆள்களை அதிகமாக்கி பணிகளை விரிவுபடுத் தப் போகிறார்கள். இது தொடர்பான முடிவு நேற்றைய கிளிநொச்சிச் சந்திப்பில் எடுக்கப்பட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே ரெலிவசன் பி.பி. ஸிக்குத் தெரிவிததுள்ளார். (ஐ-9)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியா மாவட்ட நீதிவான் எம்.இள்ஞ் செழியன் சடலத்தை பிரேத பரிசோத னைக்காக வவுனியா வைத்தியசா லையில் ஒப்படைக்குமாறு பணித்தார்.

சடலத்தின் அருகில் கிடந்து எடுக் கப்பட்ட சாரம் துண்டு போன்ற துணி ஏற்கனவே வவுனியா தட்சக்குளம் பகுதியில் எரியுண்ட நிலையில் கிடந்த சடலத்தின் அருகில் காணப்பட்ட துணியைப் போன்றது எனத் தெரி விக்கப்படுகிறது.

பாவற்குளம் யுனிட் 9 பகுதியிலும் பண்டாரிக்குளம் பகுதியிலும் எரியுண்ட நிலையில் ஏற்கனவே சடலங்கள் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

### ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க நவம்பர் இரண்டாவது வாரத்தில் வாஷிங்ரனுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

இலங்கை அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சி, பொருளாதார நடவடிக்கைகள் குறித்து இச்சந்திப் பில் விசேடமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நீண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார்.

அங்கு தலைமையுரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

குறைந்த சலுகைகளைப் பெறு கின்ற மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்குப் பதிலாக ஏற்கனவே வசதிகளுடன் வாழும் சில ருக்கு லாபம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெ டுக்கப்படுகின்றன.

நாட்டின் தலைமைத்துவத்தை இளைய சமுதாயத்தின் ஒத்துழைப் பின்றி முன்னெடுக்க முடியாது.

சமாதானம் எனத் தெரிவித்தபோதி லும் தற்போது நடைமுறையில் சமா தானம் இல்லை. தொடர்ந்தும் யுத் தம் ஒன்று ஏற்படக்கூடிய சூழலே இந்த நாட்டில் நிலவுகிறது.

பொ.ஐ.மு. அரசின் கீழ் அரசியல் பேதமற்ற முறையில் இளைஞர்களின பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான துரித திட்டங்களை மேற்கொள்ளவுள ளோம். இளைஞர்களின் ஒத்துழைப்பு டனேயே இந்தப் பிரச்சினைகள் தீர்க் கப்படும். தற்போதைய அரசு பிரச்சி னைகளைத் தீர்ப்பதாக அறிவித்த போதும் எந்தவொரு பிரச்சினையை யும் தீர்க்கவில்லை.

பொ.ஐ.மு. அரசின் காலத்தில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போதிலும் அபிவிருத்தியும் மேற் கொள்ளப்பட்டது - இப்படி ஜனாதி பதி அங்கு தெரிவித்துள்ளார்.

# புலிகள் புலிக்கொடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 மணிவரை நடைபெற்றது.

புலிகளும் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினரும் இரண்டு அல் லது மூன்று வாரங்களுக்கொருமுறை கிளிநொச்சியில் சந்திப்பதெனவும் இப் பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட் டது.

பேச்சுக்கள் முடிவுற்றபின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலை வர் ரெலிவ்சன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர் அங்கு கூறியதாவது:-

எமது பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக இருந்தன. புலிகளுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளும் வகையில் மனந்திறந்து இருதரப்பினரும் பேச் சுக்களில் கலந்துகொண்டோம். அரசு டனான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு உட்பட்டவகையில் நடவடிக்கைகளை எந்தளவுக்கு விரிவுபடுத்தலாம் என வும் ஆராய்ந்தோம்.

ஏதேனும் ஒரு சம்பவம் இடம்பெற் றால் புலிகளின் உள்ளூர் பொறுப்பா ளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள குறுகியகால அறிவிப்பே போதுமானதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

புலிகளால் நியமிக்கப்பட்டுள்ள உள்ளூர் கண்காணிப்புக்குழுப் பிரதி நிதிகளுக்கும் சர்வதேச கண்காணிப் புக்குழுவினருக்கும் இடையே தொடர் புகளையும் நல்லுறவையும் வளர்ப் பது குறித்தும் இங்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதி களில் நடைபெறும் வைபவங்கள், விழாக்களில் புலிக்கொடியை ஏற்றும் போது புலிகள் உள்ளூர் பொலீஸாரு டன் இணைந்து புரிந்துணர்வை ஏற் படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் ரெலிவ்சன் கருத்துத் தெரிவித்தார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் புலிக்கொடியின் மகத்துவம் குறித்து கண்காணிப்புக் குழுவினருக்குத் தெளி வாக விளக்கினார். தமிழ்ப்பாரம்பரியப் படி புலிக்கொடி தமிழ்ப்பகுதிகளில் ஏற்றப்படுவது குறித்தும் அவர் நீண்ட விளக்கமளித்தார்.

புலிக்கொடிக்குத் தாம் மரியாதை யும் கௌரவமும் அளிப்பதாகக் கண் காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர்.

இச்சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணிமனையில் இடம்பெற்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலை வர் ரெலிவ்சனுடன் மாவட்டங்களுக் குப் பொறுப்பான கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் புலித்தேவன் உட்பட திருமலை மாவட்டப் பொறுப்பாளர் திலக், மட்டு. மாவட்டப் பொறுப்பாள கௌசல்யன், அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் பாவா, வவுனியா மாவட் டப்பொறுப்பாளர் எழிலன், யாழ் மாவட்டப்பொறுப்பாளர் இளம்பரிதி, மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் அமி தாப் ஆகியோரும் கலந்துகொண்ட னர்.

இந்தச் சந்திப்பை அடுத்து விடுத லைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்களுக்கும் மாவட்ட கண்காணிப்புக்குழு இணைப் பாளர்களுக்கும் இடையில் சந்திப் பொன்று நடுவப்பணியகத்தில் இடம் பெற்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. (ஐ-3)

### மேலும் ஏழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வம், பழனிபாஸ்கரன் ஆகிய இரு படகோட்டிகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஏனையோரை இந்தியக் கடற்படை யினரிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யு மாறும் நீதிவான் பணித்தார்.

பிரஸ்தாப மீனவர்களிடம் இருந்து 2 படகுகள், மீன்பிடி வலைகள், றோடியோ, சுவர்க்கடிகாரம், மண் ணெண்ணெய் ஆகியன மீட்கப்பட்டி ருந்தன. அவற்றைத் தடுத்து வைக் கும் படி நீதிவான் உத்தரவிட்டார்.


கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
பொருளியல்
1. பணம், வங்கி
2. தேசிய வருமானம்
(செவ்வாய் 8.00 - 12.00)
ஆசிரியர் : S.வரதராஜன்
அளவையியல்
A/L 2005
வென் வரைபடம்
A/L 2004
குறியீட்டு அளவையியல்
ஆரம்பம்: 03.10.2003
பிற்பகல் 2.30
(12-17-29) (C-30416)



CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்.
PHYSICAL CHEMISTRY
Mon.,Tue.5.30-6.30 p.m.
இன்று ஆரம்பம்
By: அன்பழகன்.
சடப்பொருளின் இயல்புகள் Thurs 5.30p.m.
ஆரம்பம்: 02-10-03
(12-17-29) (C-30368)
By: யோகானந்தா.



NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L BIOLOGY DAY CLASS
By: நாகநாதன்
30.09.2003 Tue. 8.00 a.m.
(23068) (12-17-29)



External Degree
(Jaffna University & Peradeniya)

| | G.A.Q 3.00 -6.00 | B.A. Part I 3.00 -6.00 | B.A. Part II 3.00 -6.00 | 1 st in com 3.00 -6.00 | B.Com. Part I 3.00 -6.00 | B.Com. Part II 3.00 -6.00 | B.Com. Part III 3.00 -6.00 |
|---|---|---|---|---|---|---|---|
| Monday | English Philosophy Tamil | Tamil English Philosophy | Philosophy Tamil English | Accounting | Account-ing | Account-ing | Account-ing |
| Tuesday | Chr/Hin Drama Philosophy | Philosophy Chr/Hin Drama | Drama Philosophy Chr/Hin | Commerce Management | Business law | Marketing Manage-ment | Human Resource Manage-ment |
| Wednes day | English Tamil Geography | Geography English Tamil | Tamil - Geography English | English | English | English | Economics |
| Thurs day | Chr/Hin Drama Geography | Geography Chr/Hin Drama | Drama Geography Chr/Hin | Accounting | Accoun ting | Accoun ting | Account ing |
| Friday | Sub.Env Pol.Sc. History | Pol.Sc. History | Pol.Sc. History | Commerce Management Maths & Busin-ess statistic | Business law | Production Manage-ment | Economics |
| Saturday | Eco. (9.00-10.00) | Eco. (10.00-11.00) | Eco. (11.00-12.00) | Eco. (9.00-10.00) | Eco. (10.00-11.00) | | |
| Sunday | Eco. (9.00-10.00) | Eco. (10.00-11.00) | Eco. (11.00-12.00) | Eco. (9.00-10.00) | Eco. (10.00-11.00) | | |

Further Details
Director
Uduvil Girls College,
Under Graduate Department,
Uduvil, Chunakam.
T.P: 3300


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் இராசலட்சுமி

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாக வும், தற்காலிகமாக நெல்லியடியில் வசித்தவருமான திருமதி சிவசுப்பிர மணியம் இராசலட்சுமி நேற்று (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (அரச மரக்கூட்டுத்தாபனக் களஞ்சியப் பொறுப்பாளர்) அவர்களின் மனைவியும் மகமலாதேவியின் (ஜேர்மன்) அன்புச் சகோதரியும் ஜெ.சுந்தரலட்சுமி, சி.இராஜவிக்கிரமன் (ஜேர்மன்), சிவராஜதேவி (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.ஜெயாநந்தன் (ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்-போதகர்), இபுவனேஸ்வரி, செ.விக்னேஸ்வரன், ர.சுதாகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதன் (மாவீரர்), சுகந்தன், சுதர்சன், சுபாசினி, மோகனதாஸ், சுகந்தி, தயா, சுதாகரன், சுபாசினி, சுபசோபன், எழில்மதி, பிரகாஷ், மீரா, பிரதீபன், அச்சுதன் விதுசினி, அனுசன், லோஜிதா, சங்கவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெ.சுந்தரலட்சுமி (மகள்),
இ.தயா (பேரன்).

*முருகமூர்த்தி கோயிலடி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*
(C/30418) (29-12-17)

## இரத்தினம் தங்கவேல்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தங்கவேல் நேற்று (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை அதி காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி, மனோகரி, காலஞ்சென்ற நிமலசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தின லிங்கம், இராஜகுமாரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜஸ்விந்தன், சோதி ராஜ், லாறன், நிமலராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*நியூ சோதி நகைத்தொழிலகம்*
*சுன்னாகம்*
(23114) (29-12-17)

## கதிரவேலு கேசவரத்தினம்

(கீரிமலை)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட கதிரவேலு கேசவரத்தினம் நேற்று (28.09.2003) ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பூரணத்தின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் லோகாம்பாள், நகுலாம்பாள் (லண்டன்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003). திங்கட்கிழமை பிற பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மேற்கு பத்துப் பனையடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள், மருமக்கள்,
சுதாகரன் (பெறாமகன்).

*சண்டிலிப்பாய் வடக்கு.*
(23115) (29-12-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச்சந்தி, யாழ்ப்பாணம். (23056)

## வலை விற்பனைக்கு

4 3/4"x105x1000, 21இளை 16 துண்டுகள் உடைய சொற்ப காலம் பாவித்த வலை விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்கு குஞ்சன்ன, வேம்படி, வல்வெட்டித்துறை. விற்பனை தொடர்புகளுக்கு: M.அரியம், 4ஆம் குறுக்குத்தெரு (Hostel முன்பாக), பருத்தித்துறை. (22815)

## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி, வடலியடைப்பில் (வடலியடைப்பு ஐயனார் ஆலயத்திற்கு அண்மையில்) 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. து.பகீரதன், அரசடி வீதி, வடலியடைப்பு.

(சி-30410)

## கைமாறிவிட்டது

தியாகி திலீபன் நினைவு நாளான 26.09.2003 வெள்ளிக்கிழமை நல்லூரில் (ஆண்) சைக்கிள் ஒன்று தவறுதலாக கைமாறி எடுத்துச்செல்லப்பட்டு விட்டது. மாறி எடுத்தவர்கள் முடமாவடி பூங்கனிச்சோலையில் சைக்கிளை ஒப்படைத்து உங்கள் சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும். (23092)

## ஆசிரியர்களே!

ஆசிரியர் தினத்தில் நடிப்பதற்குப் பொருத்தமான "கல்வியா? கடா கல்யாணமா?" நாடகத்தைக் கொண்ட நூல் "எங்கள் நாடு" 360 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 75/-. (23093)

**THE ROYAL COLLEGE OF "SPOKEN ENGLISH" JAFFNA**

By: விக்னேஸ்வரன் ஆச்சாரி

426 (302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பிளாக் வீதி, எங்கானை.

(23031) (26-24-13-16)

## வீடு விற்பனைக்கு

கோயில் வீதி ஒழுங்கையில் 3 பரப்புக் காணியில் 4 படுக்கை அறை ஹோல், சாப்பாட்டறை, சமையல் அறை, கராஜ் ஆகிய சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
திருமதி அ.இம்மானுவல்,
143, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.: 222 5569**

(23085) (24-13-16)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க்குற்றமற்ற, 30.03.1969 இல் பிறந்த, கிரகபாவம் 20, மகம் நட்சத்திரம், கொழும்பில் சொந்தத்தொழில் புரியும் 5'3" உயரமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: விள.இல.2056, மே/பா உதயன்.

(23046)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 இல் பிறந்த, மிருகசீரிடம், செவ்வாய்க் குற்றமற்ற, கனடாவை வதிவிடமாகக்கொண்ட மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2058 மே/பா உதயன். (23054)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த, பரணி, உதயச்செவ்வாய், கொழும்பு கணக்காளர் மணமகனுக்கு (I.C.M.A.) ஏற்ற மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2057, மே/பா உதயன். (23055)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பூச நட்சத்திரம், கிரகபாவம் 58, 32 வயதான, B.Sc. Civil Engineer, கனடா மணமகனுக்கு பட்டதாரி அல்லது அதற்குச் சமனான கல்வித் தராதரமுடைய 27 வயதுக்கு மேற்படாத மணமகள் தேவை. ஜாதகம் புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2059, மே/பா உதயன். (23077)

## தவறிவிட்டது

தாமோதரஐயர் மாரீஸ்வரன் என்பவரது விசேட அடையாள அட்டை (090204231I) 25.09.2003 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(23095)

## அறை வாடகைக்கு தேவை

மருத்துவபீட மாணவிக்கு வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்குத் தேவை. யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதி விரும்பத்தக்கது. தொடர்பு: இல.17, கோவில வீதி, யாழ்ப்பாணம்.T.P. 222 6846, 222 6315. (23086)

## விற்பனையாளர் தேவை

/புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு:
நடராசா செல்வராஜா
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(23081) (26-24-13-16)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரியமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

### சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்-குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-29970) (24-13-16)

# மரண அறிவித்தல்

## வெள்ளைச்சாமி பாலகிருஸ்ணன்

மாத்தளையைப் பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளைச்சாமி பாலகிருஸ்ணன் 26.09.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சீதாவின் அன்புக் கணவரும் சாந்தனின் தந்தையாரும் மங்கையர்க்கரசியின் மாமனாரும் சாந்திதேவியின் மைத்துனரும் யோகேஸ்வரனின் பெரிய தந்தையும் சங்கீதா (யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை தரம் -1 மாணவி), சங்கீர்த்தனா (கில்னர் ஆரம்ப பாலர் பாடசாலை மாணவி), துரணிகா, பிரியதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*102/14, காளிகோயில் ஒழுங்கை,*
*கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (23049) (19-13-16-24)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 512 |
| திகதி | 26.09.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
**5208616-5224974**

வெற்றி இலக்கங்கள் **02 18 32 43**

லக்கினம்: மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,829,000/-
வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 358,486 | 10 | 3,584,860 |
| 2 இலக்கங்கள் | 33,022 | 20 | 660,440 |
| 1 இல + லக்கினம் | 32,607 | 30 | 978,210 |
| 2 இல + லக்கினம் | 2,981 | 100 | 298,100 |
| 3 இலக்கங்கள் | 879 | 500 | 439,500 |
| 3 இல + லக்கினம் | 77 | 5,000 | 385,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,829,000 | 1,829,000 |
| மொத்தம் | 428,056 | - | 8,475,110 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.8,475,110/-

தொடர் இல. 4228595க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 செப்டெம்பர் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5211888-4-34**
**5216805-5-36**
**5217941-9-61**
**5221713-3-17**
**5215145-7-68**

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3000000 இருந்து
3019241 வரை
சீட்டிழுப்பு இல. 1439
திகதி 27.09.2003

வெற்றி எண்கள் **06 11 28 42 56**

போனஸ் எண் **02**

ஜக்பொட் பரிசு
ரூபா.2,495,850/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,495,850/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 113 | 10,000/- | 1,130,000/- |
| 3 | 6,026 | 500/- | 3,013,000/- |
| 2 | 100,458 | 20/- | 2,009,160/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 06ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 123,161 | 10/- | 1,231,610/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,683,660/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.3,449,500/-

தொடர் இல. 2010465க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 01ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3019015-7-09**
**3007614-0-81**
**3004120-0-25**
**3011348-5-01**
**3009408-9-55**

# நடந்து முடிந்த சமாதானப் பேச்சுக்களில் சாதகமான நான்குவித முன்னேற்றங்கள்

**விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியடைந்துள்ள நிலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களின்போது ஏற்பட்ட நான்கு முன்னேற்றங்களை ஆராய்கின்றார் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பீடாதிபதி ஜெயதேவ உயன்கொட. 'சிலுமின' பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

***கேள்வி:*** அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையேயான பேச்சுக்கள் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதியன்று முதன்முதலாக ஆரம்பமாகின. இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு இப்போது ஓராண்டு காலம் நிறைவடைந்துள்ளது. தாய்லாந்தின் 'சதாப்கி' தொடக்கம் 'காகோன்' வரை ஆறு சுற்றுப் பேச்சுக்களை மேற்கொள்வதில் இரு தரப்பினரும் வெற்றிகண்டனர். இந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக தங்களது மதிப்பீடு யாது?

*பதில்:* இவ்வாண்டு மார்ச் மாதம் வரையான கடந்துபோன ஆறுமாத காலத்தை இந்நாட்டின் சமாதானப் பேச்சுக்களில் முதலாவது கட்டமாக நான் கருதுகிறேன். தற்போது முதலாவது கட்டத்தைத் தாண்டி இரண்டாவது கட்டம் ஆரம்பித்துள்ளது. இம்முதலகட்ட சமாதானப் பேச்சுக்களில் பல சிறப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சமாதானப் பேச்சுக்கள் போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னணியிலேயே ஆரம்பிக்கப்பட்டன. சாதாரணமாக எந்தவொரு நாட்டிலும் உள்நாட்டுப்போருக்கு அரசியல் தீர்வு காண முயலும் வேளையில், யுத்தம் மற்றும் மோதல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்திக்கொள்ள முனைவது அத்தியாவசிய விடயமாக அமைகிறது. அதற்கான முக்கிய நடவடிக்கையாக போர்நிறுத்த உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சி அமைகிறது. அவ்விதம் போர்நிறுத்த உடன்பாடொன்று எட்டப்பட்ட பின்னர் அந்த உடன்பாட்டை தொடர்ந்து பேணிவர வேண்டியது மிக முக்கியமானதாக அமைகிறது. எனவே, தற்போதைய பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு போர்நிறுத்த உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இருதரப்பினரும் முயன்றனர். சமாதானப் பேச்சுக்களில் மூன்று வகையான முன்னேற்றங்கள் காணப்பட்டன. அதுவரை காலமும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமை முதலாவது முன்னேற்றகரமான நடவடிக்கையாகும். உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் இணைந்துகொள்வதற்கு இத்தடை நீக்கம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அத்தியாவசியமானது. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை அவர்களது அரசியல் அங்கீகாரத்துக்கான பாதையைத் தடைசெய்தது. பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொண்ட அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தனியான அரசொன்றை உருவாக்குவதற்கான யுத்தத்தில் ஈடுபடாது என ஒருதலைப்பட்சமாக அறிவித்தார். அதற்குப் பதிலாக, ஸ்ரீலங்காவினுள் தன்னாட்சி உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சி நிர்வாக நடைமுறையொன்றை ஏற்றுக்கொள்ளத் தாம் தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தார். இதன்மூலம் தனியான அரசு என்ற தமது குறிக்கோளுக்கு அரசியல் ரீதியான மாற்றம் ஒன்றை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு தயாராகவுள்ளதாகக் கருத முடிந்தது. ஸ்ரீலங்கா அரசின் எவ்வித அழுத்தங்களும் இன்றி விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தலைப்பட்சமாக இவ்விதம் தீர்மானித்தமை சிறப்பான விடயமாகக் கருதப்பட்டது. இதை இப்பேச்சுக்களின் இரண்டாவது முன்னேற்றகரமான நடவடிக்கையாகக் கருதமுடியும். மூன்றாவது முன்னேற்றகரமான நடவடிக்கை கடந்த வருடம் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் தாம் ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்கு சுயாட்சி மற்றும் சமஷ்டி அடிப்படையில் அமையும் அரசியல் தீர்வொன்றினை எட்டும் நோக்கில் இருதரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட இணங்கிக்கொண்டமை ஆகும்.

இவ்வகை முன்னேற்றங்களுக்கு மேலதிகமாக முதல்சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் சர்வதேச ரீதியிலான முன்னேற்றம் ஒன்றும் இடம்பெற்றது. அம்முன்னேற்றத்தின் பயனை இவ்வாண்டிலேயே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதுவே சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவின் சமாதான நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் ஸ்ரீலங்காவுக்கு பொருளாதார உதவி வழங்கும் தனது விருப்பினை வெளிப்படுத்திய சம்பவமாகும். சாதாரணமாக இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரே சர்வதேச சமூகத்தின் உதவிகள் வழங்கப்படுவது வழக்கமாகும். இந்நாட்டின் சமாதான நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்குடன் பொருளாதார உதவி வழங்கப்படுதல் அவசியமென ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்றே ஐரோப்பிய நாடுகளும் தீர்மானித்தன. இவ்வாறான நான்கு சாதகமான முன்னேற்றங்கள் கடந்த சமாதானப் பேச்சுக்கள் மூலம் எட்டப்பட்டுள்ளன.

**பிரபாவே இறுதி முடிவு**

*கேள்வி:* அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாகி மூன்றாவது சுற்றுப்பேச்சுக்களை அண்மித்த வேளையில் பேச்சுக்களில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பான பிரதிநிதிகள் குழுவில் வெளிப்படையான மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. விசேடமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் களமுனைத் தளபதிகளை பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைப்பீடம் தெரிவு செய்தது. விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பான பேச்சுக்குழுத் தலைவரான அன்ரன் பாலசிங்கம் இப்பேச்சுக்களில் வகித்து வந்த பாத்திரம் ஓரங்கட்டப்படுவதாக செய்திகள் பரவின. இராஜதந்திரத் தொடர்புகளில் திறமைமிக்கவரெனக் கருதப்படும் அன்ரன் பாலசிங்கத்துக்குப் பதிலாக பேச்சு மேசையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் களமுனைத் தளபதிகள் முன்னிலைப்படுத்தப்படுவார்களானால் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பேச்சுக்களின் வெற்றி மற்றும் உருவாகவுள்ள உண்மைத் தோற்றம் ஆகியன குறித்து சில விமர்சகர்கள் ஐயம் கொள்ளுகின்றனரே? இதுபற்றிய தங்களது கணிப்பீடு யாது?

*பதில்:* அன்ரன் பாலசிங்கம் தொடர்பாக பலவித கருத்துக்கள் வெளிவருகின்றன. அவர் பேச்சு நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால், திருப்திகரமற்ற அவரது உடல்நிலை காரணமாகவே தற்போது அவர் இந் நடவடிக்கைகளில் பங்கேற்கவில்லை எனவே நான் கருதுகின்றேன். ஆனால், இதன் காரணமாக சிற்சில வதந்திகள் உருவாகியுள்ளன. அன்ரன் பாலசிங்கம் ஆங்கிலம் பேசுகின்ற, சர்வதேச அனுபவங்கள் கொண்ட நம்பிக்கைக்குரிய பாத்திரமாவார். எனினும் அரசியல் பேச்சுக்கள் தொடர்பான அடிப்படை முடிவுகளை பிரபாகரனே மேற்கொள்கிறார்.

நம் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம், உலக நாடுகளின் அரசியல் நிலை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் போன்றே, விடுதலைப் புலிகளது ஆயுதப் 'போராட்டம் தொடர்பான தற்போதைய' நிலை, அதன் எதிர்காலம், ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்புகளை எவ்விதம் பேண முடியும்? மற்றும் ஆயுதப்போராட்ட மூலம் எட்டப்படக்கூடிய இலக்கின் எல்லை போன்ற சகல விடயங்கள் தொடர்பாக விரிவான ஆராய்ந்த பின்னரே விடுதலைப் புலிகள் அமைப்பு இப்பேச்சு நடவடிக்கைகளில் பங்கேற்க முன்வந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இப்பேச்சுக்கள் மூலமாக தாம் எதனை அடைய முடியுமெனவும், எவற்றைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்படுமெனவும், அவர்கள் மத்தியில் தெளிவான விளக்கம் உண்டு. இவ்விடயத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைப்பீடம் சிறசில அடிப்படை முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

அந்த அடிப்படை முடிவுகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள அவர்களால் இயலும். உதாரணமாக சமாதான நடவடிக்கைகளின் ஆரம்ப காலப் பேச்சுகளில் கருணாவை கலந்துகொள்ள வைத்திருக்கமுடியும். கருணா விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண களமுனைத் தள



பதியாவார். பின்னர் கருணாவைப் பேச்சுக்குழுவில் இடம்பெறவைத்த தன் மூலம் வடக்கு - கிழக்குப் பகுதியின் விடுதலைப் புலிகள் அமைப்பில் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதாகவும், அந்த அமைப்பு பலமானதொரு நிலையில் இருந்துகொண்டே பேச்சுக்களில் கலந்துகொள்கிறது எனக் காட்டிக்கொள்வதாகவும் அமைகிறது. பாலசிங்கம் மட்டுமே பேச்சுக் குழுவில் இடம்பெற்றிருப்பாராகில் அமைப்பின் வெளிநாட்டுக் குழு மட்டுமே கலந்துகொண்டது போல அமைந்திருக்கும்.

**தமிழில் : வீமெஸ்ரி**

அவ்விதம் நேர்ந்திருப்பின் தமது போர்த்திறமைகளை வெளிப்படுத்தி, விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுகளுக்கு அழைக்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்த போராளிகள் தரப்பிற்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லையே என விமர்சிக்கப்பட்டிருக்கும். எனவேதான் விடுதலைப் புலிகள் அமைப்பு தமது அடிப்படைக் கொள்கைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் இவ்வித அணுகுமுறைகளை பிரயோகிப்பதை வழக்கப்படுத்திக்கொண்டுள்ளது.

உதாரணமாக இரண்டாம் கட்டப் பேச்சுகளில் பங்குபற்ற கிளிநொச்சி மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டாம் மட்டத் தலைவர்களிலிருந்தே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முதற் கட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் போன்று விடுதலைப் புலிகள் இயக்கம் மீது அரசுக்கு நம்பிக்கையை வளர்க்கும் அடிப்படையில் ஈடுபடப்போவதில்லை. ஏற்கனவே அவ்வித நம்பிக்கை உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவே பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர்.

தமக்குத் தெரிந்த சகலவித அணுகுமுறைகளையும் கைக்கொண்டு யுத்தரீதியாக சிறியதொரு தனிநாட்டை உருவாக்குவதற்கான சூழ்நிலை இன்றைய தென்கிழக்காசிய கட்டமைப்பின் நிலைவரத்திலோ அல்லது ஒட்டுமொத்த உலக அரசியல் நிலைவரத்திலோ சாத்தியமற்றதென்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். அதேவேளை தனியரசுக் கோரிக்கையுடன் முன்னெடுக்கப்படும் யுத்தத்தாலும் தமிழ்மக்களுக்கு கிடைக்கக்கூடிய பயன் சொற்பமே என்பதையும் அவர்கள் தெரிந்துகொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா அரசு போன்றே தாமும் சமபலத்துடன் விளங்குகின்றனர் என்ற தோற்றப்பாட்டை உருவாக்க முடிந்தமை கடந்த 20 வருடகாலமாக தாம் முன்னெடுத்துச் சென்ற வெற்றிகரமான யுத்தத்தின் மூலம் பெறமுடிந்த பெறுமதியான பலாபலன் என அவர்கள் நம்புகின்றனர்.

ஸ்ரீலங்கா அரச படைகளால் எவ்விதத்திலும் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை. இச்சமபல நிலையைத் தொடர்ந்து பேணிவருவதன் மூலம் தமது கொள்கைக்காக ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு பேண முன்வந்துள்ளனர். அதேவேளை தமது போரிடும் திறன், தூரம் ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதிலும் புலிகள் அக்கறை செலுத்தி வருகின்றனர். இப்பேச்சுகள் தமது யுத்தரீதியிலான பலத்தை நலிவடையச் செய்யும் விதத்தில் செல்ல அவர்கள் இடமளிக்கப்போவதில்லை. யுத்தத்தின் மூலம் அவர்கள் பெற்ற வெற்றிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட அவர்கள் இடமளிப்பரெனத் தோன்றவில்லை.

பேச்சுகள் மூலம் இடைக்கால நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிக்கு பெரும்பாலும் இரண்டாம் கட்டப் பேச்சுகளில் அவர்களுக்கு வாய்ப்புகள் அதிகமுண்டு.

இந்த இடைக்கால நிர்வாக அதிகாரம் மூலம் தமது பெரும்பாலான குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் ஆர்வம் அவர்களிடம் நிறையவுண்டு. தமது அரசியல் நடவடிக்கை மற்றும் நிர்வாகத்திறன் என்பவற்றை உறுதியான வகையில் நிலைநிறுத்திக்கொள்வது அவர்களது குறிக்கோளாகும். இதன்மூலம் தமது நிர்வாக கட்டமைப்பையும், அதிகார நடைமுறைகளையும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உறுதியான விதத்தில் நிலைநிறுத்திக் கொள்வதும், சமூக மட்டத்தில் பொருளாதார மற்றும் புனர்நிர்மாணப் பணிகளையும் ஆரம்பித்தலும் அவர்களது அடுத்த குறிக்கோள்களாக அமைந்துள்ளன.

இந்த இரண்டாம் கட்டப்பேச்சுகள் விடயத்தில் அவர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்குமிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஜப்பான் நாட்டின் விசேட பிரதிநிதி அகாஷி கடந்த சில நாட்களின் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பினரைச் சந்தித்து மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே சர்வதேச உதவிகள் - அதாவது டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட உதவிகள் - வழங்கப்படுமெனத் தெரிவித்திருந்தார். இதன் மூலம் சர்வதேச சமூகத்தின் பொருளாதார உதவிகள் வடகிழக்குப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்றடைவதை, விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் பேச்சுகளில் கலந்துகொள்வதுடன், சம்பந்தப்படுத்த ஜப்பான் முனைகிறது.

அதேவேளை, இவ்விரு செயற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படுவதை விடுதலைப் புலிகள் அமைப்பு விரும்பவில்லை. இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் யோசனைகளுக்கு தாம் சமர்ப்பிக்கவுள்ள மாற்றுயோசனைகள் குறித்த அரசின் முடிவின் அடிப்படையிலேயே தாம் மீண்டும் பேச்சுகளில் கலந்துகொள்வது பற்றித் தீர்மானிக்க முடியுமென விடுதலைப் புலிகள் அமைப்பு கருதுகிறது. இதிலிருந்து அவர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிரத்தை காட்டுவதாகத் தோன்றுகிறது. இச்சமாதானப் பேச்சுக்களின் முதற்கட்ட முடிவின் போது, இடம்பெற்ற பேச்சுக்களிலும், சமாதான முயற்சிகளிலும் சர்வதேச சமூகத்தின் பெருமளவிலான தலையீடு இடம்பெற்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இவ்விடயத்தில் அமெரிக்காவும் ஜப்பானுமே முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்களது இத்தலையீடுகள் குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு மகிழ்ச்சியடையவில்லை. அரசுக்கு நெருக்கமான சர்வதேச சமூகம் இடம்பெற்ற பேச்சுகளில் அரசுக்குச் சார்பாகவும், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சாதகமற்ற வகையிலும் செயற்பட்டதாக அந்த அமைப்பு கருதுகின்றது. எனவே இரண்டாம் கட்டப் பேச்சுக்களின்போது சமாதானப் பேச்சு மற்றும் சமாதான நடவடிக்கைகள் ஆகிய இரு விடயங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை சர்வதேச சமூகத்தின் மூலம் தயாரிப்பதே விடுதலைப் புலிகளின் தந்திரமாகும்.

அத்துடன் இவ்விடயத்தில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் அனுசரணையை நாடுவதை விட ஐரோப்பிய நாடுகளின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வதையே விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர். இது புதுமையானதல்ல. தற்போதைய உலக அரசியல் நிலைவரத்தின்படி, அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே அடிப்படை அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. ஈராக்கிய யுத்தத்தின் பின்னர் இதனை வெளிப்படையாக அவதானிக்கமுடிகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு சர்வதேச நாடுகள் மத்தியில் காணப்படும் இவ்வகையான விரோத மனப்பாங்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**இடைக்கால நிர்வாக வரைவு**

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்பின் சட்ட வல்லுநர்கள் பிரான்ஸில் கூடி அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கான தமது மாற்றுயோசனைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர். அவர்கள் சமர்ப்பிக்கவுள்ள மாற்று யோசனைகளை தென்பகுதியால் எதிர்கொள்ள இயலுமா?

*பதில்:* விடுதலைப் புலிகள் அமைப்பின் மாற்று யோசனைகள் பற்றிய விவரங்களை தற்போது கூறுவது சிரமமானதாகும். அதேவேளை, அவர்கள் சமர்ப்பிக்கும் மாற்று யோசனைகள் அரசுக்குச் சிரமம் அளிக்காத வகையிலும் உருவாக்கப்படக்கூடும். இவ் இடைக்கால நிர்வாக அமைப்பை ஐ.தே.கட்சி அரசு பதவியிலுள்ள இவ்வேளையில் பெற்றுக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு கடும் சிரத்தை எடுத்து வருகின்றது. இது நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் ஆயுதப் போராட்டம் தொடர்பான விடுதலைப் புலிகள் அமைப்பின் நிலைப்பாட்டின் காரணமான முடிவாகவும் இருக்கலாம் என்பது எனது நம்பிக்கையாகும். ஐ.தே.கட்சி அரசுடன் பேசுவதன் மூலம் மட்டுமே இவ் இடைக்கால நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள இயலுமென்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசியல் ரீதியில் ஐ.தே.கட்சிக்கு சிக்கல்களை உருவாக்காமல் - அரசு பலவீனமடையும் நிலைமையை ஏற்படுத்தாமல் - அதேவேளை தமது குறிக்கோளை நிறைவேற்றக்கூடிய விதத்திலான யோசனைகளை அவர்கள் பெரும்பாலும் முன்வைக்க இடமுண்டு.

மாறாக சிலவேளை விடுதலைப் புலிகள் அமைப்பு முன்வைக்கவுள்ள யோசனைகள் அரசுக்கு இக்கட்டை ஏற்படுத்துவதாக அமையக்கூடும். தமது அணுகுமுறையின் அடிப்படையில் அரசுக்குச் சிரமத்தை ஏற்படுத்தத்தக்க யோசனைகளை அவர்கள் தற்போது முன்வைக்கமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

அவர்களது மாற்று யோசனைகளின் அடிப்படையில் அரசுடன் மேற்கொள்ளவுள்ள பேச்சுக்களில் அவர்களது அபிலாஷைகள் முன்வைக்கப்

(16ஆம் பக்கம் பார்க்க)